வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 22.11.2023 புதன்கிழமை | இதழ் : 346 | பக்கங்கள் : 16

## புதைகுழி எவ்வளவு தூரம் வியாபித்துள்ளது என்பதை அறிய ஸ்கான் மூலம் சோதனை

### சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ

முல்லைத்தீவு, நவ. 22

புதைகுழியானது எவ்வளவு தூரம் வியாபித்து இருக்கின்றது என்பதனை அறிய எதிர்வரும் 24 ஆம் திகதி விசேட ஸ்கான் இயந்திரம் மூலம் சோதனையிடப்படவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட விசேட சட்ட வைத்திய அதிகாரி

11



## மாவீரர் வாரம் நேற்று ஆரம்பம்!

### யாழ்.பல்கலையில் மாணவர்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 22

தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழின விடுதலைக்காக தம் உயிரை ஈந்த மாவீரர்களை நினைவு கூரும் மாவீரர் வாரம் நேற்று செவ்வாய்க்கிழமை அஞ்சலி நிகழ்வுகளோடு ஆரம்பமானது.

யாழ்ப்பாணப்

11



## ஓ.எல்.பெறுபேறு சில தினங்களில்

கொழும்பு, நவ. 22

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் இன்னும் சில தினங்களில் வெளியிடப்படும். அதற்கான நடவடிக்கைகள் முடிவடையும் நிலையில் இருக்கின்றன என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஏழாவது நாள்

11

# போர் பாதித்த மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு எந்த திட்டமும் இல்லை

## அரசை சாடினார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

கொழும்பு, நவம்பர் 22

போர் முடிவடைந்த நாளில் இருந்து போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கை ஒரு போரால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக விசேடமாக அறிமுகப்படுத்தி நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு வேறுபட்டதொரு பிரதேசமாக அறிவித்து அந்த மக்களுடைய பொருளாதாரத்தை முதற்கட்டமாகப் பாதுகாத்து அதை வளர்ப்பதற்கான ஒரு திட்டம் ஒன்றை குறைந்த 5 வருடங்களுக்கு செய்திருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை நாங்கள் கூறி வருகின்றோம். ஏனெனில் - அந்தப் பிரதேசம் ஏனைய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுடைய பொருளாதாரத்துடன் போட்டி போட முடியாத நிலையாக உள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

11



## பாராளுமன்றத்தில் குழப்பம் 5 நிமிடம் சபை ஒத்திவைப்பு

கொழும்பு, நவ. 22

பாராளுமன்றத்தில் நேற்று ஏற்பட்ட குழப்பத்தையடுத்து 5 நிமிடங்களுக்கு ஒத்தி வைப்பதாக சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன அறிவித்தார்.

நாட்டின் வங்குரோத்துக்கு காரணமானவர்கள்

11

## பட்ஜெட் நிறைவேறியது

கொழும்பு, நவ. 22

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 45 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த வரவு - செலவுத் திட்ட உரை மீதான வாக்கெடுப்பிற்கு 122 ஆதரவாக வாக்குகளும் எதிராக 77 வாக்கு களும் அளிக்கப்பட்டன.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய

11

## நினைவு கூரும் உரிமையை யாரும் தடை செய்யமுடியாது

### மல்லாகம் நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 22

மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு தடைகோரி மானிப்பாய் மற்றும் பலாலி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் மல்லாகம் நீதவான் நீதிமன்றால் நேற்று நிராகரிக்கப்பட்டது.

தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் மாவீரர் நாள் நினைவேந்தலை

11

## சித்தன்கேணி இளைஞனின் சடலத்துடன் போராட்டம்!




யாழ்ப்பாணம், நவ. 22

வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்ததாகக் கூறப்படும் சித்தங்கேணியை சேர்ந்த நாகராசா அலெக்ஸின் சடலத்துடன் அப்பகுதி மக்கள் நீதி கேட்டு நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

11

## வடக்கின் துறைசார் வளர்ச்சிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும்!

### ஆளுநரிடம் கூறினார் எரிக் சொல்ஹெய்ம்

கொழும்பு, நவ. 22

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும், ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், மாகாண ஆளுநரிடம் உறுதியளித்தார்.

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச கால நிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெயமுக்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பில் நேற்று கிமுன்தினம் நடைபெற்றது.

வட மாகாணத்தின் இடர்முகாமைத்துவம், மக்களின் அன்றாட வாழ்வியல் நிலை, கால நிலை, பொருளாதாரம்,

11



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

வடக்கு, கிழக்கு சிவில் சமூக குழுவினர் நடத்திய கருத்தாடல் பற்றி நேற்றும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அது தொடர்பாக ஆய்வாளரும் அன்றைய கருத்தாடலில் வளவாளராக கலந்துகொண்டவருமான நிலாந்தன், அது தொடர்பாக கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார்.

அதில் அவர், அந்தக் கருத்தாடல் நிகழ்ச்சியில் தமிழ் மக்கள் கூட்டணியினர் கலந்துகொள்ளாதமை பற்றியும் பிரஸ்தாபித்திருந்தார்.

அவரது கட்டுரையைப் படித்தவர்கள், அந்த ஒற்றுமை முயற்சிக்கு அந்தக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் விருப்பமில்லாததால்தான் வரவில்லையோ என்று எண்ணியிருக்கலாம்.

ஆனால், அப்படி அல்ல என்றும் அந்த கருத்தாடல் பற்றிய அழைப்பிதழ் கிடைத்தபோதிலும் அதனை சரியாக பேணியிருக்காததால் அதில் கலந்துகொள்வதை தான் தவறவிட வேண்டி வந்ததாகவும் இப்போது விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வாரம் வடக்கு, கிழக்கு சிவில் சமூக குழுவின் ஏற்பாட்டில் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைப்பதற்கான முயற்சியின் ஆரம்பக் கருத்தாடலில் தான் கலந்து கொள்ளாமல் விட்டமைக்கு மன வருத்தத்தை தெரிவித்துக் கொண்ட விக்னேஸ்வரன் எம் பி, குறித்த ஒருங்கிணைப்பு முயற்சியை தான் வரவேற்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

'கொள்கை ரீதியாக அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்து குறிப்பிட்ட சில கொள்கைகளிலே ஒருமித்து செயற்பட வடக்கு, கிழக்கு சிவில் சமூக குழு முன்வரவேண்டும் என்பதில் தனக்கு மாற்றுக் கருத்துக்கிடையாது என்று தெரிவித்துள்ள விக்னேஸ்வரன்,

"கருத்தாடலில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் தனது கருத்துக்களும் ஒரே மாதிரிதான் உள்ளன" என்றும், "தமிழ் அரசியல் பரப்பில் கட்சிகள் எல்லாம் பிரிந்து இருப்பதனால் எங்களுக்கு நட்டம் ஏற்படுகின்றது.

"எங்களுடைய கட்சிகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமான கருத்துக்களோடு பிரிந்து நிற்பதால் தற்போது ஒரு பலமற்ற நிலையில் இருக்கும் எங்களுடைய இனமானது இன்னும் பலமற்று போகின்றது. ஆகவே எங்களுக்குள் ஒரு விதமான ஐக்கியம் ஒருமித்த கருத்துக்கள் அல்லது ஒருமித்த கொள்கை இல்லாமல் இருந்தால் எங்களை அரசாங்கம் ஒரு பொருட்டாக மதிக்காது" என்றும் தெரிவித்திருக்கிறார்.

குறித்த கருத்தாடல் நிகழ்ச்சி சமூக வலைத்தளத்தில் நேரலையாக ஒளிபரப்பாகியிருந்தது. அதனைப் பார்த்துவிட்டு லண்டனிலிருந்து ஒரு சமூக செயற்பாட்டாளர் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டார், "கருத்தரங்கில் அரசியல்வாதிகள் மாத்திரம்தானே கலந்து கொண்டதைக் காணமுடிந்தது. அந்தக் கூட்டம் நடைபெற்ற அன்றைய தினம் தமிழகத்தின் நகைச்சுவை பேச்சாளர் மேகனசுந்தரம் அவர்களின் பேச்சரங்கு நடைபெற்றதால் அங்கே இளைஞர்கள், பொதுமக்கள் சென்றுவிட்டனர் போலும்?" என்று கேட்டார்.

உண்மைதான், அந்த கருத்தாடல் நடைபெற்ற அதேதினம், இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் தமிழகத்தின் நகைச்சுவைப் பேச்சாளர் மோனசுந்தரத்தின் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த நிகழ்ச்சியும் இந்த கருத்தாடல் தொடங்கவிருந்த அதேநேரமே தொடங்குவதாக முதலில் வெளியிடப்பட்ட அழைப்பிதழ்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் பின்னர் ஒரு மணி நேரம் தாமதமாக அந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரியவந்தது.

அதுவல்ல, இந்த கருத்தரங்குக்கு இளைஞர்களோ சாதாரண பொதுமக்களோ வராததற்கு காரணம். அது ஒரு தனிப்பட்ட அழைப்பின் பேரில், அழைப்பிதழ் அனுப்பப்பட்டவர்களுக்காக மட்டும் நடந்த நிகழ்ச்சி என்பதை அந்த நண்பருக்கு விளக்கவேண்டி வந்தது.!

-ஊர்க்குருவி.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் 2ஆம் நாளாகவும் தொடர்ந்த அகழ்வுப் பணி

முல்லைத்தீவு, நவ. 22

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வு பணியானது மீள ஆரம்பிக்கப்பட்டு நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாக தொடர்ந்து நடைபெற்றது.

பாதுகாப்புக்காக மூடப்பட்டிருந்த பொலித்தீன் உறைகள் , உடல் எச்சங்களுக்கு மேற்பகுதியில் காணப்பட்ட மண்கள் அகற்றும் பணி நேற்று முன் தினம் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றிருந்தது.

அதன் தொடர்ச்சி யாக இரண்டாவது நாளாக நேற்றுக் காலை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முல்லைத் தீவு மாவட்ட



சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிசார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

(அ)

# வரலாற்றில் முதல் தடவையாக இந்த ஆண்டு வரி வருவாய் 3 டிரில்லியன் ரூபாவாக பதிவு!

கொழும்பு, நவ. 22

இலங்கை வரலாற்றின் முதல் தடவையாக 2023 ஆம் ஆண்டிற்கான வரி வருவாய் 3 டிரில்லியன் ஆக அதிகரித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (நவம்பர் 17) நிலவரப்படி அரசாங்கம் 2,394 பில்லியனை ரூபாய் வரி வருவாயை எட்டியுள்ளது என ஜனாதிபதி செயலகத்தின் பொருளாதார அபிவிருத்தி ஸ்திரப்படுத்தல் பிரிவுப் பணிப்பாளர் டபிள்யூ.எம்.ஜி. குமாரதுங்க தெரிவித்தார்.

நிதி இராஜாங்க அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திற்குப் பிந்தைய விசேட அமர்வில் உரையாற்றிய குமாரதுங்க மேலும், வருடத்திற்கு இன்னும் 30 வேலை நாட்கள் எஞ்சியுள்ள நிலையில், வரி வருவாய் ரூ. 3,000 பில்லியனை எட்டும் என அவர் கூறியுள்ளார்.

இது இலங்கையின் சாதனையாகும். இன்றுவரை அரசாங்கத்திற்கு சிறந்த வருவாயை ஈட்டித் தருவது உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எனக் கூறிய அவர், இதன் மூலம் 1,415 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது என குறிப்பிட்டார். இது மொத்த வரி வருவாயில் 84 சதவீதமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டுதல்களின் படி உருவாக்கப்பட்ட புதிய வரிக்கொள்கை மற்றும் முறையான அரசாங்க மேற்பார்வை போன்றவை இந்த இலக்கை அடைவதற்கான முக்கிய பங்காகும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

(அ)

# மகிந்தவின் பிறந்த நாள் நிகழ்வில் ரணில்

கொழும்பு, நவ. 22

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தமது 78ஆவது பிறந்த நாளை கடந்த 18ஆம் திகதி கொண்டாடியிருந்தார்.

அவரது பிறந்தநாள் நிகழ்வில் அவருக்கு நெருங்கிய பல்வேறு அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில், மகிந்த ராஜபக்ஷவின் விஜேராம இல்லத்தில் நடைபெற்ற பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டுள்ளார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதிக்கு கேக் ஊட்டி ஜனாதிபதி வாழ்த்து கூறியுள்ளார்.

மாலைதீவுக்கு உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடு திரும்பியதும் முதல் நிழ்வாக முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் இந்த பிறந்தநாள் நிகழ்விலேயே கலந்து கொண்டுள்ளார்.

18ஆம் திகதி காலை 9.30 மணியளவில் இலங்கையை வந்த டைந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோக பூர்வ இல்லமான விஜேராமவுக்குச் சென்று அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்து கேக் வெட்டிக் கொண்டாடியுள்ளார்.

இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# ரயிலிலிருந்து வீழ்ந்து மூளைச்சாவடைந்த மாணவனின் உடலுறுப்புக்கள் தானமாக வழங்க முன்வந்த பெற்றோர்!

கொழும்பு, நவ. 22

மூளைச்சாவடைந்த பல்கலைக் கழக மாணவர் ஒருவரின் உடல் உறுப்புகளை தானமாகக் கொடுப்பதற்கு அவரது பெற்றோர் தீர்மானித்துள்ளனர்.

வெயாங்கொடை மாலிகதென்ன பகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவரின் உறுப்புகளே இவ்வாறு தானமாக வழங்கப்படவுள்ளன. 23 வயதான இசங்க ரணசிங்க என்ற இந்தப் பல்கலை மாணவன் ரயிலில் பயணித்தபோது தெமட்டகொடை மற்றும் களனி நிலையங்களுக்கு இடையில் ரயிலிலிருந்து தவறி வீழ்ந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து வைத்தியர்கள் பரிசோதனை நடத்தியபோது மாணவன் மூளைச்சாவடைந்து விட்டதாக வைத்தியர்கள் மாணவனின் பெற்றோரிடம் தெரிவித்தனர்.

வைத்தியர்களின் இந்த அறிவித்தலையடுத்து, இசங்காவின் அனைத்து உறுப்புக்களையும் தானமாக வழங்குவதற்கு இசங்காவின் பெற்றோர்கள் வைத்தியர்களிடம் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

(அ)

# காதலரால் துஷ்பிரயோகத்துக்குள்ளாகும் சிறுமிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 22

காதல் உறவுகளினால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும் 16 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பெற்றோர் அவதானமாக இருக்குமாறு பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வருடத்தின் கடந்த ஒன்பது மாதங்களில் மாத்திரம் 917 சிறுவர்கள் இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளனர். இது கடந்த 2022 வருடத்துடன் ஒப்பிடும் போது அதிகரித்துக் காணப்படுகிறது.

இதேவேளை, கடந்த ஒன்பது மாதங்களில் மட்டும் கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 425 ஆகும்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது அதிகரிப்பையே காட்டுவதாகவும் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் தெரிவித்துள்ளது.

Eelanadu ஈழநாடு

22.12.2023 புதன்கிழமை

சோபகிருது வருடம், கார்த்திகை 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# சொல்ஹெய்மின் அபிவிருத்திக்கான அக்கறை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்முக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையில் - சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இதன்போது, வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி விடயங்களுக்கு தான் பூரண ஆதரவளிப்பதாகவும் - சூரிய சக்தி, காற்றாலை மற்றும் நீர்மின் உற்பத்தி திட்டங்களுக்கான விடயங்களில் இலங்கைக்கு உதவுவதில் தான் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் எரிக் தெரிவித்திருக்கின்றார். இம்முறை அவரது விஜயத்தின் போது, முதலிலேயே, வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்திருக்கின்றமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். நோர்வேஜிய இராஜதந்திரியான சொல்ஹய்ம் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு நன்கு பரிட்சயமான ஒருவர்.

விடுதலைப் புலிகளுக்கும் ரணில் அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான முன்னெடுப்புக்களின் பிரதான நபரான, சொல்ஹெய்ம், தமிழ் மக்களின் நியாயமான அரசியல் தீர்வு விடயங்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்தவர் ஆனாலும், தமிழ் அரசியல் சமூகத்தின் ஒரு பகுதியினர், சொல்ஹெய்ம் தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். சமாதான ஏற்பாட்டாளரான அவர், விடுதலைப் புலிகள் யுத்தத்தில் தோற்கடிக்கட்ட பின்னரான சூழலில், வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீது கரிசனையை காண்பிக்கவில்லை என்றவாறான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் இப்போதும் உண்டு. இந்த விமர்சனம் சொல்ஹெய்ம் என்னும் தனிநபர் தொடர்பானதல்ல. மாறாக, நோர்வே தொடர்பானது. எனினும் சமாதான ஏற்பாட்டாளர் என்னும் வகையில், இரண்டு தரப்புக்களும் யுத்தத்தை தெரிவு செய்தபோது - தங்களால் என்ன செய்ய முடியுமென்னும் வாதத்தை சொல்ஹெய்ம் தங்கள்பக்க பதிலாக முன்வைத்திருக்கின்றார்.

எனினும் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் பல்வேறு கலந்துரையாடல்களின் போது, தமிழ் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகளுக்கு ஆதரவாகவே பேசியிருக்கின்றார். இந்த நிலையில் அவர் வடக்கு மாகாண அபிவிருத்தி பற்றி கரிசனைப்படுவதை வரவேற்கலாம். ஆனால், வடக்கு மாகாண அபிவிருத்தி என்னும் பெயரில் அரசின் வேலைத்திட்டங்களுக்கான ஆலோசகர் என்னும் சிறிய வட்டத்திற்குள் மட்டும் அவர் நின்றுவிடக்கூடாது. அதுவே அவருக்கான எல்லையாக இருந்தாலும் கூட, வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே மேற்கொள்ளவிருந்த காற்றாலை திட்டம் பதற்றங்களை ஏற்படுத்தியதையும் சொல்ஹெய்ம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எரிக் சொல்ஹெய்ம், ஓர் அனுபவம்மிக்க சர்வதேச இராஜதந்திரி. சமாதான உடன்பாட்டு காலத்திலும் - அதன் பின்னரும், ஒரு விடயத்தை அவர் அழுத்திக் கூறிவந்திருக்கின்றார். அதாவது, விடுதலைப் புலிகள் இயக்கம், இந்தியாவை சரியாக புரிந்துகொள்ளவில்லை - அதுதான் அவர்களது வீழ்ச்சிக்கு பிரதான காரணமென்று பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டிருக்கின்றார். சமாதான ஏற்பாட்டாளராக இருந்த போதும், புதுடில்லியின் சக்தியையும் அதன் தலையிடும் எல்லையற்ற ஆற்றலையும் தெளிவாக புரிந்துகொண்டு, அதற்கேற்ப புதுடில்லியுடன் சுமுகமான உறவை ஏற்படுத்தியிருந்தார்.

இவ்வாறான பின்புலம் கொண்டவரான - சொல்ஹெய்ம், தமிழ் பகுதிகளுக்கான அபிவிருத்தி தொடர்பில் பேசுகின்ற போது, குறித்த அபிவிருத்தியானது, புதிய சிக்கல்களுக்கு வழிவகுக்காத வகையில் அமைய வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாண மக்களின் அபிவிருத்தியை வெறுமனே அரசு மட்டும் தீர்மானிக்க முடியாது - தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் பெரும்பான்மையான தமிழ் கட்சிகள் அரசாங்கத்திற்கு வெளியில் இருக்கின்றனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏற்கனவே, அரசாங்கத்தினால் அனுமதியளிக்கப்பட்ட சில திட்டங்கள் - குறிப்பாக மீன்பிடித்துறைசார் திட்டங்கள், வடக்கு மாகாண மீனவர் சமூகத்தினால் எதிர்க்கப்படுவதையும் சொல்ஹெய்ம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

*"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!"*

**- கவிஞர் புதுவை இரத்தினதுரை**



# முக்கிய பணிகளிலிருந்து விலக தயாராகும் ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கம்!

*கொழும்பு, நவ. 22*

கொடுப்பனவுகள் வழங்கப்படாவிட்டால், சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு பணிகளில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் கமல் கித்சிறி கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில், இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டை இலக்கு வைத்து சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனினும், இதுவரையில் தமது கொடுப்பனவு குறித்து எவ்வித தெளிவுபடுத்தல்களும் வழங்கப்படவில்லை.

அனைத்து தரப்பினருக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனில் எவ்வித பிரச்னையும் இல்லை.

ஆனால் உயர் மட்டத்தில் உள்ள அதிகாரிகளுக்கு கொடுப்பனவு வழங்கப்படுகின்ற போதிலும், ஏனையோருக்கான கொடுப்பனவை வழங்காமையினாலேயே தற்போது பிரச்னை ஏற்பட்டுள்ளது.

எனவே, தமது கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு பணிகளில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் கமல் கித்சிறி குறிப்பிட்டுள்ளார். (அ)

# நாட்டில் பல்வேறு விபத்துக்களால் வருடாந்தம் 12,000 பேர் உயிரிழப்பு!

*கொழும்பு, நவ. 22*

பல்வேறு விபத்துக்களால் ஒவ்வொரு வருடமும் பத்து லட்சம் பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாகவும், 12,000 பேர் உயிரிழப்பதாகவும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

ஊனமுற்றலை தடுப்பது தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்

ஏறத்தாழ 3000 விபத்துக்கள் வீதி விபத்துக்களால் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த விபத்துக்களில் 50 வீத வீடுகளில் நிகழ்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆபத்தான போக்கைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் சுட்டிக் காட்டினார். (அ)

# குறைந்த வரியில் இறக்குமதி செய்யப்பட்ட சீனியை அரசு பொறுப்பேற்க நடவடிக்கை

*கொழும்பு, நவ. 22*

இறக்குமதி வரி அதிகரிப்பதற்கு முன்னர் 25 சதத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட சீனி தொகையினை இன்று முதல் அரசாங்கம் பொறுப்பேற்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வர்த்தக வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதுடன், குறித்த சீனியை, சதொச விற்பனையகங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பல்பொருள் அங்காடிகள் ஊடாக சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.


அத்துடன் ஒரு கிலோ கிராம் சீனி 275 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

சீனிக்கான இறக்குமதி வரியானது 25 சதமாக காணப்பட்ட நிலையில், அதனை 50 ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் அண்மையில் தீர்மானித்தது.

எனினும், சில நிறுவனங்கள் வரியை அதிகரிக்கும் தீர்மானத்தை முன்கூட்டியே அறிந்து பெருமளவில் சீனியை இறக்குமதி செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அதேநேரம், சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக, கீரி சம்பா அரிசியை இறக்குமதி செய்ய, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



நவம்பர் - 22 புதன்கிழமை
சோபகிருது வருடம் - கார்த்திகை 06
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : நவமி




**மேடம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள். மதிக்கப்படுவீர்கள். இனிமையான நாள்.

**இடபம்**
சொன்ன சொல்லை காப்பாற்ற துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மிதுனம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். சில சூட்சமங்களை கற்றுக் கொள்வீர்கள். தடைகள் ஏற்படும் நாள்.

**சிம்மம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். எதிர்பாராத வெற்றி கிடைக்கும் நாள்.

**கன்னி**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். அக்கம் -பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்.

**விருச்சிகம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். பயணங்களால் அலைச்சல் உண்டு. வாகனவசதிப் பெருகும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**தனுசு**
குடும்பத்தில் ஆதரவு பெருகும். குடும்பத்தின் பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும்.

**மீனம்**
கணவன் மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். மறைமுக எதிர்ப்புகள் வந்து போகும். எதிலும் பொறுமை தேவைப்படும் நாள்.

# விஜயகாந்த் உடல்நிலை குறித்த வதந்தி!

சென்னை, நவ. 22

தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல் நிலை குறித்த வதந்திகளை நம்பவேண்டாம் என அக்கட்சி சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு, தனது உடல் நலத்தைக் கருத்தில்கொண்டு, அதிமுக தலைவர் விஜயகாந்த் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கி இருக்கிறார். அமெரிக்கா, சிங்கப்பூர் உள்ளிட்ட வெளிநாடுகளில் விஜயகாந்துக்கு சிறந்த மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டன. தற்போது அவர் வீட்டில் ஓய்வெடுத்து வரும் நிலையில், அவரது பெயரில் தேமுதிக தலைமையகம் வாயிலாக அறிக்கைகள் மட்டும் வெளியாகி வருகின்றன.

மாதம் ஓரிரு முறை சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனைக்குச் சென்று, மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில், கடந்த சில நாட்களாக தொடர் மழை மற்றும் குளிர்ந்த சூழல் நிலவி வருவதால், விஜயகாந்த் தொடர் இருமல், காய்ச்சல், சளி, தொந்தரவால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதற்கு சிகிச்சை பெறுவதற்காக கடந்த 18ஆம் திகதி மியாட் மருத்துவமனையில் விஜயகாந்த் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்நிலையில், அவருக்கு செயற்கை சுவாசம் அளித்து சிகிச்சை வழங்கப்படுவதாக தகவல் பரவியது. இதையடுத்து, கட்சித் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தேமுதிக தலைவர் விஜயகாந்த், வழக்கமான மருத்துவப் பரிசோதனைக்காக சென்றுள்ளார். அவர் ஓரிரு நாளில் வீடு திரும்புவார். செயற்கை சுவாசம் கொடுக்கப்படுவதாக பரவும் தவறான செய்திகளை யாரும் நம்பவேண்டாம். இது முற்றிலும் தவறான தகவல். இது போன்ற வதந்திகளை யாரும் நம்பவும் வேண்டாம், பரப்பவும் வேண்டாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

(அ)

# தமிழ் திரையுலகம் சார்பில் டிசெம்பர் 24 கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு விழா

## ரஜினி, கமல் பங்கேற்கிறார்கள்

சென்னை, நவ. 22

தமிழ் திரையுலகம் சார்பில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டையொட்டி பிரமாண்ட விழா சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் வருகிற டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இதையொட்டி நுங்கம்பாக்கத்தில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் நேற்று காலை பத்திரிகையாளர் சந்திப்பு நடந்தது.

நிகழ்ச்சியில் தயாரிப்பாளர் சங்க தலைவர் ராமசாமி, செயலாளர் ராதாகிருஷ்ணன், பொருளாளர் சந்திர பிரகாஷ், கலைப்புலி எஸ்.தாணு, ஆர்.கே.செல்வமணி, கே.ராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிர்வாகிகள் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

திரையுலகின் மற்ற சங்கங்களுடன் இணைந்து தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைமையில், கலைஞர் ஆற்றிய மகத்தான சாதனைகளை அவரது நூற்றாண்டில் கலைஞர் 100 எனும் மிக பிரமாண்டமான விழாவாக அடுத்த மாதம் 24 ஆம் திகதி அன்று சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் ஸ்ரேடியத்தில் நடத்த திட்டமிட்டுள்ளோம்.

அகில இந்திய அளவில் தெலுங்கு, கன்னடம், பெங்காலி, மலையாளம், இந்தி, மராத்தி, ஒரியா, குஜராத்தி என பல மொழி திரைப்பட கலைஞர்களை இந்த விழாவில் கலந்து கொள்ள வருமாறு அழைப்பு விடுக்க உள்ளோம்.

கலைஞர் வசனம் எழுதிய படங்களில் இருந்து பல்வேறு காட்சிகள் நேரடியாக நடித்து காட்ட திரைப்பட நட்சத்திரங்கள் தயாராகி வருகின்றனர்.

இந்த மாபெரும் விழாவில் முதல்கட்டமாக கமல்ஹாசன், ரஜினிகாந்த், இளையராஜா கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் இந்த விழாவில் தமிழ் சினிமாவில் உள்ள முன்னணி நட்சத்திரங்கள், விஜய், அஜித், இயக்குநர்கள், இசையமைப்பாளர்கள் என பலரும் கலந்து கொள்ள அழைப்பு விடுத்துள்ளோம்.

சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் ஸ்ரேடியத்தில் குறைந்தபட்சம் 35,000 பேர் இந்த விழாவினை அமர்ந்து பார்க்கும் வண்ணம் மேடை அமைக்கப்பட உள்ளது.

இந்த மாபெரும் விழாவில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகிறது.

நடனம், நாடகம், இசைக்கச்சேரி, ஒலி, ஒளி காட்சிகள், டிரோன்கள் படையெடுப்பில் கண்கவர் நிகழ்ச்சிகள் மேலும் பல வித்தியாசமான நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை கவரும் வண்ணம் உருவாக்கி வருகிறோம்.

இந்த விழாவினை திரை நட்சத்திரங்களும், திரைக்கலைஞர்களும் பங்கெடுத்து சிறப்பிக்க இருப்பதால் அடுத்த மாதம் (டிசம்பர்) 23 மற்றும் 24 ஆகிய இரண்டு நாட்கள் தமிழ்நாடு முழுவதும் படப்பிடிப்புகள் உட்பட திரை உலக வேலைகள் எதுவும் நடைபெறாது- என்றனர்.

(அ)

# பி.சுசீலா பாடலை பாடி கௌரவ டாக்டர் பட்டம் வழங்கினார் முதல்வர் ஸ்டாலின்

சென்னை, நவ. 22

தென்னகத் திரையிசையின் தேன்மதுரக் குரல் "கானசரஸ்வதி" பி. சுசீலாவிற்கு இசை பல்கலைக்கழகம் சார்பில் முதல்வர் ஸ்டாலின் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, கன்னடம் உள்ளிட்ட பன்மொழிகளில் ஏறக்குறைய 40,000 இற்கும் அதிகமான பாடல்களை பாடியவர் பி.சுசீலா. கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்ற இவருக்கு ஏற்கனவே பத்மபூஷண் விருது, ஐந்து முறை தேசிய விருது, மூன்று முறை தமிழக அரசு விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று காலை நடந்தது. இதில் மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது. அதோடு பின்னணி பாடகி பி.சுசீலாவிற்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அதேபோல், இசையியல் அறிஞர் பி.எம்.சுந்தரம் என்பவருக்கும் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. இதனை தமிழக முதல்வரும், பல்கலைக்கழக வேந்தருமான ஸ்டாலின் வழங்கி கௌரவித்தார்.

பின்னர் ஸ்டாலின் பேசியதாவது:-

இசைக்கும் எனக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது. இந்தியாவில் இசைக்காக உருவாக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம் இதுதான். முழுக்க முழுக்க மாநில அரசின் நிதியுதவியில் இப்பல்கலை செயல்படுகிறது. அதைவிட சிறப்பு, இப்பல்கலைக்கு மட்டும்தான் மாநில முதல்வர், வேந்தராக இருக்கும் உரிமை உள்ளது. நான் அரசியல் எல்லாம் பேசவில்லை, எதார்த்தத்தை பேசுகிறேன்.

முதல்வரே வேந்தராக இருந்தால் தான் பல்கலைக்கழகங்கள் சிறப்பாக வளர முடியும். மற்றவர்கள் கையில் இருந்தால் அதன் நோக்கம் சிதைந்து விடும் என்பதால் தான் 2013ல் முதல்வரே வேந்தராக இருக்கும் வகையில் அன்றைக்கு முதல்வராக இருந்த ஜெயலலிதா முடிவு செய்துள்ளார். இதற்காக அவரை மனதார நாம் பாராட்டலாம், நானும் பாராட்டுகிறேன்- என்றார்.

நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசுகையில், பி.சுசீலா பாடிய 'நீ இல்லாத உலகத்திலே..' என்ற பாடலை பாடி காட்டினார். ஸ்டாலின் பாடியபோது அரங்கத்தில் இருந்தவர்கள் கைத்தட்டினர்.

(அ)

# உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து அரசாங்கத்தின் நடவடிக்கை என்ன?

## சபையில் சஜித் பிரேமதாஸ கேள்வி

**கொழும்பு, நவ. 22**

**பொருளாதார குற்றவாளிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தரப்பினருக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி பாராளுமன்றில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட உரையாற்றினார்.**

**இந்த நிலையில், இதற்கு ஆளும் தரப்பினர் கடும் எதிர்ப்புக்களை வெளியிட்ட காரணத்தினால் சபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டதோடு, சபை நடவடிக்கையும் 5 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, “நாட்டை வங்குரோத்து நிலைமைக்குத் தள்ளியவர்கள் யார் என்பது தொடர்பாக உயர்நீதிமன்றம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பொன்றை வெளியிட்டுள்ளது.



தவறான தீர்மானங்களை எடுத்த இந்தத் தரப்பினர், இன்னமும் அரசாங்கத்தின் சலுகைகளை அனுபவித்து, ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் தவறான தீர்மானத்தினால், நாட்டு மக்கள்தான் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த குற்றவாளிகளுக்கு எதிராக அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை மக்கள் அவதானத்துடன் பார்த்துக் கொண்டிக்கிறார்கள்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது?

மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, அஜித் நிவாட் கப்ரால், பீ.பி. ஜயசுந்தர உள்ளிட்ட தரப்பினரால் இழைக்கப்பட்ட பாதிப்புக்கான நஷ்டஈட்டை குறித்த தரப்பிடமிருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

அப்படியானால் எவ்வாறு அது மேற்கொள்ளப்படும்? இதற்கான கால எல்லையை அரசாங்கம் கூறவேண்டும்.

1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொதுச் சொத்துக்கள் சட்டத்திற்கு இணங்க, இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபருக்கு பரிந்துரை செய்யப்படவேண்டும்-என்றார். (அ)



# மாவீரர்களின் பெற்றோருக்கு கிளிநொச்சியில் கௌரவம்!

கிளிநொச்சி, நவ. 22

மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வானது நேற்று கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி கிருஸ்ணபுரம், விநாயகபுரம், அம்பாள்குளம் ஆகிய பகுதிகளில் நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மாவீரர்களின் நினைவுப் படத்துக்கு விளக்கேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (அ)

# நாட்டுக்கு தரமான மருந்துகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை!



கொழும்பு, நவ. 22

நாட்டில் தட்டுப்பாடு இன்றி மருந்துகளை விநியோகிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சின் புதிய செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

அத்துடன், உரிய நேரத்தில் தரமான மருந்துகளை இறக்குமதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# ஒரே இரவில் 7 கடைகளில் திருட்டு!



வவுனியா, நவ. 22

வவுனியா, வன்னிப்பிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபர் காரியாலத்திற்கு முன்பாக அமைந்துள்ள 7 வியாபார நிலையங்களில் திருட்டு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இந்த தொடர் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் எனவும் சுமார் 50, 000 ரூபாய் வரையிலான பணம் திருடப்பட்டுள்ளதாகவும் வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் சி.சி.ரி.வி கமெராக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இவ்வருடம் 116 தரமற்ற மருந்துகள் நாட்டில் பதிவு

கொழும்பு, நவ. 22

இவ்வருடம் 116 தரமற்ற மருந்துகள் நாட்டில் பதிவாகியுள்ளதாக சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

தரமற்ற மருந்துகளைப் பற்றிய புகாரும், அவற்றை விநியோகிக்கும் நிறுவனங்களுக்கு மருந்து ஒழுங்குமுறை அதிகாரிகளின் பதில்களும் சில இடங்களில் இரண்டு விதமாக இருக்கின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

“ அதனால், சட்டத்தின் மீதான நம்பிக்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மருந்து மாபியாவின் ஒரு அங்கமாகவே அவர்கள் செயல்படுவதைத் தடுக்க முடியாது.

மருந்து அதிகாரசபையின் கொள்கையை உடனடியாக நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

போலியான சான்றிதழையும் மற்றொரு புற்றுநோய் தடுப்பூசியையும் காட்சிப்படுத்துங்கள்.

புற்றுநோய் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் ரிடுக்ஸிமாப் என்ற தடுப்பூசி, போலியான மருந்து ஆணைய பதிவுக் கடிதம் மூலம் சுகாதார அமைச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

போலியான இம்யூனோகுளோபிலினை இறக்குமதி செய்த அதே நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட இந்த மருந்தின் 2200 ஊசி மருந்துகளை சுகாதார அமைச்சு கொள்வனவு செய்துள்ளதுடன், அதில் 2000 இற்கும் அதிகமான தொகை நோயாளிகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. “ என தெரிவித்துள்ளார்.

தடுப்பூசியின் ஒரு டோஸ் 152 அமெரிக்க டொலர்களுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், மொத்த கையிருப்புக்காக சுகாதார அமைச்சு நூறு மில்லியன் ரூபாவிற்கும் அதிகமாக செலவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரிசி இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, நவ. 22

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு அடுத்த மாதத்தில் 1 இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாட்டில் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை பேணும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு அடுத்த



மாதத்தில் 1 இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுள்ளோம்.

ஆகவே கூடிய விரைவில் அரிசி இறக்குமதியை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

விசேடமாக கீரிச் சம்பா மற்றும் சம்பா அரிசிகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கின்றோம்.

அதனூடாகவும் நாட்டில் அரிசியின் விலையை கட்டுப்படுத்த முடியவில்லை எனின் தொடர்ந்தும் அதிகளவான அரிசிகளை இறக்குமதி செய்தாகிலும் விலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுப்போம்.

நாட்டிலுள்ள பிரதான அரிசி ஆலை உரிமையாளர்கள் அதிக இலாபம் ஈட்டுவதற்காக இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்கள்.

ஆகவே அடுத்த வாரத்தில் இருந்து அரிசி இறக்குமதி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளோம்-என்றார். (அ)

# மின்சாரத்துறை சீர்திருத்த சட்டமூலத்திற்கு அனுமதி!

கொழும்பு, நவ. 22

முன்மொழியப்பட்ட மின்சாரத் துறை சீர்திருத்த சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பான சட்டமூலத்திற்கு நேற்று முன் தினம் பிற்பகல் கூடிய அமைச்சரவை அனுமதி வழங்கியதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதன்படி, புதிய சட்டமூலம் வர்த்தமானியாக வெளியிடப்பட்டு, பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும்.

பாராளுமன்ற அனுமதியைப் பெற்ற பின்னர், இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு, செயல்திறன், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மேம்படுத்த புதிய மின்சாரச் சட்டத்தின் ஊடாக திட்டமிட்டுள்ளது.

புதிய சட்டம் ஊடாக மின்சார உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகம் ஆகியவற்றில் தனியார் துறை பங்களிப்பையும் பெற்றுக் கொள்ள அனுமதிக்கிறது. (அ)

# எதிர்க்கட்சித் தலைவர் உரைக்கு இடையூறு ஏற்படுத்தியோர் மீது நடவடிக்கை வேண்டும்

## லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் கோரிக்கை

**கொழும்பு, நவ. 22**

**எதிர்க்கட்சித் தலைவரின் உரைக்கு இடையூறு ஏற்படுத்தியவர்கள் மீது நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்தினார்.**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றிக் கொண்டிருக்கும்போதே ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு சபையில் சர்ச்சையில் ஈடுபட்டனர்.

இதன்போது தனது எதிர்ப்பைத் தெரிவித்த லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த, எதிர்க்கட்சித் தலைவரின் கோப்பை பறித்து எடுத்தார்.

இதில் முக்கியமான ஆவணங்கள் இருந்தன. இது தொடர்பான சி.சி.ரி.வி. காட்சிகளை பார்வையிட்டு சபாநாயகர் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இது அவமரியாதைக்குரிய செயற்பாடாகும். சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அஜித் மானப்பெருமவுக்கு நீங்கள் அவ்வேளையிலேயே தான் தண்டனை வழங்கினீர்கள்.

இந்த சம்பிரதாயத்தைப் போன்று, இந்த விடயத்திலும் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது, ஆளும் தரப்பு உறுப்பினர்கள் தான் சபைக்கு நடுவே வந்து குழப்பினார்கள்.

இதற்கு நீங்களும் சாட்சியாளர். எனவே, ஒரு தரப்புக்கு சார்பாக மட்டும் செயற்பட வேண்டாம்-என்றார். (அ)

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் கார்த்திகை வாசம் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இன்று முதல் நவ. 30 வரை

யாழ்ப்பாணம், நவ. 22

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் கார்த்திகை வாசம் என்ற பெயரில் நடத்தி வரும் மலர்க்கண்காட்சி இம்முறையும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் (கிட்டு பூங்கா) நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சி நடைபெறும் மலர் முற்றம் காட்சித்திடல் இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கிலியன் பூங்காவில் (கிட்டுப் பூங்கா) திறந்துவைக்கப்படவுள்ளது.

கௌரி முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இத் தொடக்க நிகழ்ச்சியில் சிறப்புரைஞர்களாக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், சமூக அரசியற் செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் இக் கண்காட்சி இம் மாதம் 30ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் முன்னிரவு 7.00 மணி வரை நடைபெறவுள்ளது. கண்காட்சியைப் பார்வையிடவரும் மாணவர்களுக்கு வழமை போன்று இம் முறையும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இலவசமாக மரக்கன்றுகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வுபூர்வமாக ஆரம்பமாகியது மாவீரர் வாரம்





முல்லைத்தீவு, நவ. 22

முல்லைத்தீவு மாவட்டத்திலும் பல்வேறு இடங்களில் மாவீரர் வாரத்தின் ஆரம்ப நிகழ்வுகல் நேற்று உணர்வுபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின.

உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர்வணக்கம் செலுத்தி மாவீரர்கள் உணர்வுபூர்வமாக அஞ்சலிக்கப்பட்டனர்.

இவ்வாண்டும் நவம்பர் 27 மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக இடம்பெறும் எனவும், அனைத்து மாவீரர் பெற்றோர் உறவுகளையும் கலந்துகொள்ளுமாறும் முன்னாயத்த பணிகளிலும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

அத்தோடு 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்தபோது வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இருந்த கல்லறைகள், நினைவுக் கற்கள் மற்றும் வளாகம் முற்றாக சேதமாக்கப்பட்டது.

குறித்த துயிலும் இல்லம் இராணுவத்தினரிடம் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக மாவீரர் நாள் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்று வருவதோடு இவ்வாண்டும் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ)

# வடக்கில் இளையோர் பிரச்னைகளை ஆராய்வதற்கு குழு நியமிக்க பணிப்பு



யாழ்ப்பாணம், நவ. 22

வடமாகாணத்தில் உள்ள இளையோர் மத்தியில் காணப்படும் பிரச்னைகளை ஆராய்வதற்கான குழுவை நியமிக்குமாறு வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

வட மாகாணத்திலுள்ள கல்வி, சுகாதாரம்,மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது வட மாகாணத்தில் மாணவர்கள் இடைவிலகல் குறித்து பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டுமெனவும், சுமார் 25 வீதமான பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு கட்டாயம் தேவைப்படுவதாகவும் கல்வித்துறைசார் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் மாணவர்களின் சுகாதார நிலைமை தொடர்பில் கவலை தெரிவித்த வடமாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள், விசேடமாக மாணவிகளின் சுகாதார நிலைமை, மாதவிடாய் சிக்கல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

மேலும் சிறார்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுதல், வீட்டு வன்முறைகளுக்கு ஆளாகுதல், சிறுவர் தொழிலாளர்களாக மாற்றப்படுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் ஆளுநரிடம் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

இந்நிலையில் அதிகாரிகளின் கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்த வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வட மாகாண கல்வி, சுகாதாரம், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுக்களின் செயலாளர்களையும், ஏனைய உயர்மட்ட அதிகாரிகளையும் இணைத்து குழுவை நியமிக்குமாறும், இந்த குழுவின் ஆலோசனைக்கு அமைய துறைசார் குழுக்களையும், உப குழுக்களையும் நியமித்து, சமூக மட்டத்தில் காணப்படும் அடிப்படை பிரச்னைகளை உடனடியாக ஆராய்ந்து, அதற்கு எவ்வாறு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பது என்பது தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறும் பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# ஏ-9 வீதியில் உள்ள 46 மரங்களை அகற்றும் நடவடிக்கை ஆரம்பம்



கிளிநொச்சி, நவ. 22

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ-9 வீதியில் உள்ள ஆபத்தான 46 மரங்கள் முழுமையாக அகற்றும் பணி நேற்று ஆம்பமானது.

குறித்த வீதியில் ஆபத்தானதாக 57 மரங்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அதில் 46 மரங்களை முழுமையாக அகற்றவும், 11 மரங்களின் ஆபத்தான கிளைகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் முன்னெடுக்கப்படும் குறித்த நடவடிக்கைக்கு போக்குவரத்து பொலிஸார், மின்சார சபையினர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதேச சபையினர் மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை அமைச்சருக்கு பிரிட்டன் தீவில் சொத்து?

## புலனாய்வு ஊடகவியலாளர்கள் சர்வதேச கூட்டமைப்பு தகவல்

கொழும்பு, நவ. 22

**பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் பிரித்தானிய வேர்ஜின் தீவுகளில் அமைந்துள்ள இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களின் உரிமையாளராகவும் இயக்குநராகவும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக புலனாய்வு ஊடகவியலாளர்களின் சர்வதேச கூட்டமைப்பு வெளிப்படுத்தியுள்ளது.**

**சர்வதேச புலனாய்வுப் பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள சமீபத்திய பண்டோரா பேப்பர்ஸ் அம்பலப்படுத்தல் மூலம் இது தெரியவந்துள்ளது.**

சர்வதேச புலனாய்வுப் பத்திரிகையாளர் கூட்டமைப்பு 100 நாடுகளைச் சேர்ந்த 280 பத்திரிகையாளர்களைத் தொடர்பு கொண்டு அவர்களின் சமீபத்திய வெளிப்பாடு தொடர்பான தகவல்களைச் சேகரித்தது.

ஜூலை 2017 முதல் பிரிட்டிஷ் வேர்ஜின் தீவுகளில் உள்ள பான்ஹாம் வென்ச்சர்ஸ் லிமிடெட் மற்றும் டெப்ரோம்டன் பிராப்பர்டீஸின் உரிமையாளர் மற்றும் இயக்குநராக டிரன் பிரசன்னா கிறிஸ்தோபர் அலஸ் இருந்து வருவதாக சர்வதேச புலனாய்வுப் பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு வெளிப்படுத்துகிறது.



உலகப் பணக்காரர்கள் வரியில்லாப் பணம் மற்றும் வெளியிடப்படாத கறுப்புப் பணத்தை முதலீடு செய்வதற்கான முதலீட்டுத் தலமாக வேர்ஜின் தீவுகள் அறியப்படுகின்றன.

மேலும், இலங்கையானது நாட்டிற்கு வெளியே மூலதனத்தை கடுமையாக கட்டுப்படுத்தும் நாடாக இருப்பதால், இலங்கையர்கள் வெளிநாட்டு நிறுவனங்களில் முதலீடு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையின் பொது பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சர் இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களில் பணத்தை முதலீடு செய்து அவற்றிலிருந்து நன்மைகளை பெற்றுக்கொண்டமை சர்ச்சைக்குரிய விடயமாகும்.

இந்நிலையில், பிரித்தானியாவின் லண்டனில் உள்ள பொதுப் பாதுகாப்பு அமைச்சருக்குச் சொந்தமான இரண்டு வீடுகளின் புகைப்படங்களை ரொய்ட்டர்ஸ் ஊடகவியலாளர் ரங்கஸ்ரீ லால் செய்தி ஒன்றின் மூலம் பகிரங்கப்படுத்தியுள்ளார். (அ)

# சீன விசேட தூதுக்குழு பிரதமருடன் சந்திப்பு!

கொழும்பு, நவ. 22

இலங்கையின் தற்போதைய பொருளாதாரம், அரசியல் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஷென் யிகின் உள்ளிட்ட தூதுக் குழுவினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாட்டுக்கு வருகை தந்துள்ள சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் விசேட பிரதிநிதி ஷென் யிகின் உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்று முன் தினம் அலரி மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்து கலந்துரையாடினர்.



இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த சந்தர்ப்பத்தில் பொருளாதாரத்தை மீட்டெடுக்க சீனா வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, எதிர்காலத்திலும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சீனா உதவும் என நம்புகிறோம் என்று தெரிவித்துள்ளார். (அ)

# சி.ஐ.டி வாசலில் தேங்காயை உடைத்து சாபமிட்டவர் கைது!

கொழும்பு, நவ. 22

குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு தெய்வ சாபம் வேண்டும் என குற்றப்புலனாய்வு திணைக்கள கட்டடத்தின் நுழைவாயிலுக்கு முன்பாக தேங்காய் உடைத்த 'மகேன் ரட்டாட' அமைப்பின் தலைவர் சஞ்சய மஹவத்தவை கொழும்பு கோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் இதுவரை முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்து அவர் இந்த செயலில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


சம்பவம் இடம்பெற்ற போது கொழும்பு கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் குழுவொன்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அருகில் இருந்ததையடுத்து அவரை கைது செய்தனர்.

பின்னர் அதிகாரிகள் நேற்று முன் தினம் மஹவத்தை பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர்.

இச்சம்பவத்தின் போது, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நுழைவாயிலுக்கு அருகில் பல சிவில் ஆர்வலர்களும் சாலையோரம் இருந்தனர். (அ)

# கட்சிகளை ஒருங்கிணைக்க முயல்வதை வரவேற்கிறேன்!

## கூறுகின்றார் விக்னேஸ்வரன் எம்.பி.



யாழ்ப்பாணம், நவ. 22

யாராக இருந்தாலும் கட்சிகளை ஒருங்கிணைக்க முயல்வதை நான் வரவேற்கின்றேன் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்

கடந்த வாரம் வடக்கு-கிழக்கு சிவில் சமூகக் குழுவின் ஏற்பாட்டில் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைப்பதற்கான முயற்சியின் ஆரம்பக் கருத்தாடலில் தான் கலந்துகொள்ளாமல் விட்டமைக்கு தனது மன வருத்தத்தை தெரிவித்துக்கொண்ட விக்னேஸ்வரன் எம்.பி. குறித்த ஒருங்கிணைப்பு முயற்சியை தான் வரவேற்பதாகவும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொள்கை ரீதியாக அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்து குறிப்பிட்ட சில கொள்கைகளில் ஒருமித்து செயற்பட வடக்கு-கிழக்கு சிவில் சமூக குழு முன் வர வேண்டும் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து கிடையாது.

எவ்வாறான நடவடிக்கைகளில் இவர்கள் இறங்கி இருக்கின்றார்கள் என்பது சம்பந்தமாக எனக்கு தெரியாது. ஆனால் கட்சிகளை ஒருங்கிணைக்கும் விடயத்தை நான் வரவேற்கின்றேன்.

கருத்தாடலில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் எனது கருத்துக்களும் ஒரே மாதிரி தான் உள்ளன.

தமிழ் அரசியல் பரப்பில் கட்சிகள் எல்லாம் பிரிந்து இருப்பதனால் எங்களுக்கு நட்டம் ஏற்படுகின்றது. மலைநாட்டு தமிழர்களை பார்த்தோமேயானால் ஒரு கட்சியின் ஊடாக தொண்டமான் ஒட்டுமொத்த மலைநாட்டு தமிழர்களுடைய கோரிக்கைகளையும் ஒன்றிணைந்து அல்லது ஒருமித்து ஒரே குரலாக அவருக்கு கொடுக்கக் கூடியதாக இருந்தது. அதனால் அரசாங்கத்திடமிருந்து பல சலுகைகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

எங்கள் கட்சிகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமான கருத்துக்களோடு பிரிந்து நிற்பதால் தற்போது ஒரு பலமற்ற நிலையில் இருக்கும் எங்கள் இனமானது இன்னும் பலமற்று போகின்றது.

ஆகவே எங்களுக்குள் ஒருவிதமான ஐக்கியம், ஒருமித்த கருத்துக்கள் அல்லது ஒருமித்த கொள்கை இல்லாவிட்டால் எங்களை அரசாங்கம் ஒரு பொருட்டாக மதிக்காது.

இதனால் தான் நான் இந்தியாவுக்கு எல்லோரும் சேர்ந்து ஒரு கடிதத்தை எழுதி பிரதமரை சந்திக்க வேண்டும் என கோரிவோம் எனக் கேட்டிருந்தேன். எல்லோரும் ஆம் என்று கூறிவிட்டு சிலர் நழுவிவிட்டார்கள். அதற்கு பலவிதமான காரணங்கள் இருக்கலாம். அதாவது இலங்கை அரசாங்கத்திடமிருந்து சில சலுகைகளை பெற வேண்டும்- இது அதற்கு தடையாக இருந்து விடும் எனச் சிலர் நினைத்திருக்கலாம்.

சிலருக்கு வெவ்வேறான எண்ணங்கள் இருந்திருக்கலாம். ஆனால் கடைசியாக அந்த கடிதம் செல்லவில்லை. ஆகவே ஒற்றுமை என்பது எமக்கு எதற்காக அவசியமாக இருக்கின்றதென்றால் நாங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கைகள் வைக்கும் போது ஒரு ஒற்றுமை இருக்க வேண்டும் அல்லது இந்தியாவிடம் சில கோரிக்கைகளை வைக்கும்போது எங்களிடம் கட்டாயமாக ஒற்றுமை இருக்க வேண்டும்.

ஏனென்றால் நான் தனிப்பட்ட முறையில் சென்று இந்திய பிரதமரை சந்தித்து ஏதாவது ஒன்றைக் கூறினால் நீங்கள் சொல்வது சரி, ஆனால் மற்றவர்களும் அதே கருத்தை கொண்டு இருக்கிறார்களா என அவர் கேள்வி எழுப்புவார். ரணிலிடம் போய் கதைக்கும்போதும் நீங்கள் சொல்வது சரி, மற்றவர்களும் இந்த கருத்தை வைத்திருக்கின்றார்களா, எனக்கு கேட்கக்கூடும்.

ஆகவே கட்சிகள் எல்லாம் ஒன்றுசேர வேண்டும். வடக்கு-கிழக்கு சிவில் சமூக குழு ஏற்பாடு செய்த நிகழ்வானது வரவேற்கத் தக்கது-என்றார்.

(அ)

# கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மருதமுனைக்கு விஜயம்

## அல்மதீனாவுக்கு நிதியும், அல்மனார் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைப்பு

கல்முனை, நவ. 22

**கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ. எம். டபிள்யு.ஜி. திஸாநாயக்க மருதமுனை பாடசாலைகளுக்கு நேற்று விஜயம் மேற்கொண்டார்.**



கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹ்துல் நஜீமின் ஆலோசனைக்கமைய, ஆசிய மன்றத்தின் முன்னாள் செயற்திட்ட ஆலோசகர் எம்.ஐ. எம். வலீத், கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய மருதமுனை அல்-மதீனா வித்தியாலயத்திற்கு இரண்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுள்ளது.

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் அனுசரணையுடன் பாடசாலை நிர்வாகத்தினர் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆவணம் உத்தியோகபூர்வமாக அதிபர் ஏ.குனுக்கத்துல்லாஹ், பிரதி அதிபர் என்.எம். முபீன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

மேலும் அல் மனார் மத்திய கல்லூரிக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும் நேற்று கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்கவால் அதிபர் ஐ.உபைதுல்லாஹ்விடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதி அதிபர் ஹஸ்மி மூஸா, சிரேஷ்ட உடற் கல்வி ஆசிரியர் எம்.ஏ.எம். அஸ்வர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

# பஸ் தரிப்பிடம் துப்புரவு




திருமலை, நவ. 22

திருகோணமலை மாவட்ட கோபாலபுரம் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள பஸ் தரிப்பிடம் கடந்த பல மாதங்களாக யாரும் கவனிப்பாரற்ற நிலைமையில் காணப்பட்டு வந்தது தொடர்பில், வெளியான செய்தியையடுத்து குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து பஸ் தரிப்பிடங்களும் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில், கடந்த வாரம் வெளியான செய்தி பற்றி, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு வந்ததையடுத்து, குச்சவெளி பிரதேச சபையிக்குட்பட்ட அனைத்து பஸ் தரிப்பிடம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் அனைத்தும் சுத்தம் செய்யப்படவேண்டும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விடுத்த உத்தரவுக்கமைவாகவே இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (அ)

# மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு



கல்முனை, நவ. 22

கல்முனை கல்வி வலயத்தின் கல்முனை அல்- மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள், வெட்டுப் புள்ளிகளை அண்மித்த மாணவர்கள் மற்றும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்கள் அனைவரையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பிரதி அதிபர் எம்.ஆர்.எம். நௌஸாத் அவர்களின் நெறிப்படுத்தலில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ. அப்துல் ரஸாக் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சித்தியடைந்த மாணவர்கள் அனைவரும் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற டீ, மர்யம் ரஹா- 168, ஏ.பி. எம்.நாசித்- 162, எம்.எப். பாத்திமா சாரா- 150, கே.எம். ஹம்தூன்-148 ஆகிய மாணவர்களுக்கு பாடசாலையின் பழைய மாணவரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான எம்.ஐ.எம். அப்துல் மனாப் அனுசரனையில் விசேட பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ)

# மனித நுகர்வுக்கு பொருத்தம் இல்லாத பழங்கள் மாவடிப்பள்ளியில் சிக்கின!

காரைதீவு, நவ. 22

மாவடிப்பள்ளி பிரதான வீதியில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பழங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கைப்பற்றியுள்ளனர்.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட மாவடிப்பள்ளி பிரதான வீதியில் விற்பனைக்கு வைத்திருந்த மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பழங்களை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கைப்பற்றியுள்ளனர்.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷிரின் வ அறிவுறுத்தலுக்கு அமைய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது மனித நுகர்க்கு பொருத்தமற்ற அழுகிய இந்த பழங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த பழங்களை விற்பனைக்காக காட்சிப்படுத்திய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது



டன் இனிமேல் பொதுமக்கள் வீதியில் விற்பனை செய்யப்படுகின்ற தரமற்ற பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பில் அவதானமாக செயல்படுமாறும் கேட்டுள்ளனர். (அ)

# கல்முனை சாஹிராக் கல்லூரி சர்வதேச வரலாற்றுச் சாதனை

அம்பாறை, நவ. 22

கிழக்கின் முக்கிய பாடசாலைகளில் ஒன்றான கல்முனை சாஹிறாக் கல்லூரியின் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவன் எம்.டீ.எம். அர்மாஸ் வரலாற்றுச் சாதனை படைத்து கல்லூரியின் புகழை மிளிர வைத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் யுனைட்டட் நேஷன்ஸ் அஸோஸியேஷன் கவண்ட்ரி கிளையினால் நடத்தப்பட்ட சர்வதேச நிகழ்நிலை மூலமாக கட்டுரைப் போட்டியில் "அமைதியான உலகிற்கு இளைஞர்களின் பங்களிப்பு" எனும் துணைப் பொருளில் ஆங்கில மொழி மூலம் கட்டுரைப் போட்டியில் பங்கு பற்றிய இம்மானவன் சர்வதேச ரீதியில் 15-17 வயது பிரிவில் பங்கு பற்றி மூன்றாம் இடத்தினை பெற்று இச்சாதனையை படைத்துள்ளார்.

இம்மானவனின் இச்சாதனைக்காக சர்வதேச தரத்திலான சான்றிதழும் ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான பண பரிசினையும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் யுனைட்டட் நேஷன்ஸ் அஸோஸியேஷன் கவண்ட்ரி கிளையினால் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். (அ)



# விரைவில் போர் நிறுத்தம்!

## ஹமாஸ் தலைவர் பரபரப்பு அறிவிப்பு

ஜெருசலேம், நவ. 22

**இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே யுத்தம் தொடர்ந்து வரும் நிலையில், இரு தரப்பிற்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட உள்ளதாகப் பரபரப்பு தகவல் ஒன்றை ஹமாஸ் ஜனாதிபதி இஸ்மாயில் ஹனியே வெளியிட்டுள்ளார்.**





இஸ்ரேல் ஹமாஸ் இடையே போர் ஒரு மாதத்திற்கும் மேலாகத் தொடர்ந்து வரும் நிலையில், ஹமாஸ் ஜனாதிபதி இஸ்மாயில் ஹனியே கூறியுள்ள இந்தக் கருத்துகள் மிகவும் முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

அதாவது, இஸ்ரேல் ஹமாஸ் இடையே ஐந்து நாட்கள் போர் நிறுத்தம் ஏற்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது. காஸா பகுதிகளில் ஐந்து நாட்களுக்கு இஸ்ரேல் தாக்குதல் நடத்தாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலாக 50 மற்றும் 100 என இரு பேட்ச்களாக பணயக் கைதிகளை விடுவிப்பார்கள். அதில் இஸ்ரேல் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருப்பார்கள்.

அதேநேரம் இராணுவ வீரர் யாரையும் விடுவிக்க முடியாது என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது.

கடந்த அக். மாதம் இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலில் சுமார் 1,200 இஸ்ரேல் நாட்டை சேர்ந்தவர்கள் கொல்லப்பட்ட நிலையில், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 240 பேரை ஹமாஸ் பணயக் கைதிகளாகவும் பிடித்துச் சென்றது குறிப்பிடத்தக்கது.

(அ)



# காஸாவில் போர் நிறுத்தம் கோரி கனடாவில் மீண்டும் போராட்டம்!

ஒட்டாவா, நவ. 22

காஸாவில் போர் நிறுத்தத்தை கோரி கனடாவில் மீண்டும் போராட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

வான்கூவரில் பாரிய பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல் இராணுவத்திற்கும் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையிலான போர் இடைநிறுத்தப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

கனடிய அரசாங்கம் மனித உரிமைகள் விவகாரங்களில் கூடுதல் முன்னுரிமை எடுத்துக் கொள்ள வேண்டுமென பேரணியில் பங்கேற்றவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காஸாவில் மக்கள் பெரும் அவலங்களை சந்தித்து வருவதாக போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, காஸா பிராந்தியத்தில் உடன் அமுலுக்கு வரும் வகையில் போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# செங்கடலில் இஸ்ரேலின் சரக்கு கப்பலை கைப்பற்றிய ஆயுத குழு

## காணொளியும் வெளியானது



ஜெருசலேம், நவ. 22

தென் செங்கடலில் பகுதியில் சரக்குக் கப்பலை ஆயுதமேந்தியவர்கள் கைப்பற்றுவதைக் காட்டும் வீடியோவை யேமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் கப்பலின் கட்டுப்பாட்டை கைப்பற்றியுள்ளதோடு யேமன் மற்றும் பாலஸ்தீனிய கொடிகளை கப்பலில் பறக்கவிட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, ஈரான் ஆதரவுக் குழுவால் கடத்தப்பட்ட குறித்த கப்பல் இஸ்ரேலுடன் தொடர்புடையது என கூறப்பட்டுள்ளது.

இருப்பினும் கைப்பற்றப்பட்ட கப்பல் பிரிட்டனுக்கு சொந்தமானது என்றும் ஜப்பானியர்களுக்கு சொந்தமானது என்றும் இஸ்ரேல் கூறியுள்ளது.

(அ)

# சுரங்கத்தில் சிக்கிய தொழிலாளர்கள் பாதுகாப்பாக உள்ளமை கண்டறிவு!

புதுடில்லி, நவ. 22



இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களின் காணொளி 9 நாட்களுக்கு பின்னர் முதன்முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சுரங்கத்திற்குள் செலுத்தப்பட்ட குழாய் ஒன்றின் ஊடாக கமரா ஒன்று அனுப்பப்பட்டு, தொழிலாளர்களின் தற்போதைய நிலைமை தொடர்பில், காணொளி பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

கடந்த 12 ஆம் திகதி சுரங்கத்திற்குள் கடமையாற்றியிருந்த சந்தர்ப்பத்தில் திடீரென மண்சரிவு ஏற்பட்டிருந்தது.

இதன்போது, அதில் பணியாற்றிய 42 தொழிலாளர்கள் அதற்குள் சிக்குண்டனர்.

இந்தநிலையில், அவர்கள் குறித்த சுரங்கத்திற்குள் பாதுகாப்பாக உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கான உணவு மற்றும் பிராணவாயு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காஸாவில் நிலைமையை விரைந்து சீர்ப்படுத்துக!

## உலக நாடுகளுக்கு சீனா அழைப்பு

பீஜிங், நவ. 22

காஸாவில் தற்போதைய நிலைமையை உடனடியாக சீர்படுத்த வேண்டும் என்று உலக நாடுகளுக்கு சீனா அழைப்பு விடுத்துள்ளது.

ஹமாஸ் - இஸ்ரேல் போர் உக்கிரமடைந்து வரும் நிலையில், பலஸ்தீன அதிகாரிகள், இந்தோனேசியா, எகிப்து, சவூதி அரேபியா மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் குழு இந்த வாரம் பீஜிங்குக்கு சென்றிருந்தது.

அங்கு இஸ்ரேல் - ஹமாஸ் போர் குறித்து விவாதிக்கப்பட்டது. அந்தக் குழுவிடம் பேசிய சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, "காஸாவில் தற்போது நிலவும் நிலைமையை சரி செய்யவும், மத்திய கிழக்கில் விரைவில் அமைதியை மீட்டெடுப்பதற்கும் நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

அரபு மற்றும் முஸ்லிம் நாடுகளின் நியாயமான உரிமைகள் மற்றும் நலன்களை நாங்கள் எப்போதும் உறுதியாக பாதுகாத்து வருகிறோம்" என்ற அவர், காசாவில் நடந்துவரும் மனிதாபிமானமற்ற பேரழிவு குறித்து கவலை தெரிவித்தார். மேலும், காஸாவின் நிலைமை உலகெங்கிலும் உள்ள அனைத்து நாடுகளையும் பாதிக்கிறது. சர்வதேச சமூகம் விரைந்து செயல்பட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்றார்.



தற்போதைய பலஸ்தீன - இஸ்ரேல் மோதலில் இருந்து பொதுமக்களைப் பாதுகாப்பது மற்றும் பலஸ்தீனப் பிரச்னையை நியாயமான முறையில் தீர்ப்பது தான் இந்தப் பேச்சுவார்த்தையின் குறிக்கோள் எனக் கூறப்படுகிறது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரில் அமைதி காத்து வந்த சீனா, அண்மையில் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு தன்னை தற்காத்துக் கொள்ள இஸ்ரேலுக்கு உரிமை உள்ளது எனக் கூறியது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதல்களில் இஸ்ரேலில் ஏறத்தாழ 1,200 பேர் கொல்லப்பட்டனர். காஸாவில் 13,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, மருத்துவமனைகளை ஹமாஸ் பதுங்கிடமாகவும், தாக்குதலுக்கு திட்டமிடும் இடமாகவும் பயன்படுத்துகிறது என்றும், அல் ஷிபா மருத்துவமனைக் கீழ் ஹமாஸ் சுரங்கம் இருக்கிறது என்றும் கூறிவந்த இஸ்ரேல், அதனை உறுதிப்படுத்துவதுபோல் சில ஆதாரங்களை வெளியிட்டுள்ளது. காஸா மருத்துவமனைகளில் 35 இற்கும் மேற்பட்ட சுரங்கங்களைக் கண்டுபிடித்துள்ளதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

(அ)

# தமிழ் கடலை மீட்டெடுக்க சகலரும் ஒன்றுபடுவோம்!

## வடக்கு-கிழக்கு மீனவர்களுக்கு அழைப்பு

வடமராட்சி, நவ. 22

**புதிய கடற்றொழில் சட்டத்தின் மூலம் வெளிநாடுகளுக்கு தாரைவார்த்து கொடுக்கப்ப டவுள்ள தமிழ் கடலை மீட்டெடுக்க வடக்கு-கிழக்கு கடற்றொழிலாளர்கள் ஒன்றிணைய வேண்டும் என யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மே என முன்னாள் தலைவரும் ஊர்காவற்றுறை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச செயலாளருமான அ.அன்னராசா கோரிக்கை விடுத்துள்ளார்.**

வடமராட்சி ஊடக இல்லத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்று உலக மீனவர் தினம் கொண்டாடப்பட்டது. சர்வதேச மீனவர் தினத்தில் மீனவர்களது உரிமைகள் கிடைக்கப் பெற வேண்டும். மீனவர்களது வாழ்வாதாரம் வென்றெடுக்கப்பட வேண்டும். கடல் மேல் மீனவர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற தொனிப்பொருளில் வடக்கு-கிழக்கு கடற்றொழிலாளர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாக எமது தமிழ் கடல் மீது இருக்கின்ற உரிமைகளையும் எங்களது வாழ்வாதாரத்தையும் வென்றெடுக்க ஒன்றுபடவேண்டும்.

இலங்கை அரசாங்கத்தினால் வடக்கு கிழக்கு கடற்றொழிலாளர்களது உரிமை மறுக்கப்பட்டு வரும் நிலையில் அதிலிருந்து மீள்வதற்கு ஒன்றிணைய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் வகையிலும் இன்றைய சர்வதேச மீனவர் தினைத்தை நாம் அனுஷ்டிக்க வேண்டும்.

1996ம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்ட திருத்தத்திற்கு பதிலீடாக புதிய சட்ட திருத்தம் ஒன்று முன்மொழியப்பட்டுள்ளது. அந்த புதிய சட்டத்திருத்தின் மூலம் வடக்கு கிழக்கு கடற்றொழிலாளர்களது கடலும் கடல் வளமும் பாதிக்கப்பட இருக்கின்றது.

வடக்கு கடலை குறிப்பாக வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் கடற்பகுதிகளை வர்த்த வலயமாக உருவாக்கி, கடல் மேல் மீனவர்களுக்கு கொண்டுள்ள உரிமையை மறுத்து பல்தேசிய கம்பனிகளுக்கு விற்பனை செய்யும் மறைமுகத் திட்டமும், இலங்கைக் கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தை சர்வாதிகாரியாக மாற்றும் வகையிலேயே புதிய கடற்றொழில் சட்டம் கொண்டுவரப்பட உள்ளது.

1996 ஆம் ஆண்டுக்கு பின்னர் கொண்டுவரப்பட்ட எந்தவொரு சட்டத்தையும் நடைமுறைப்படுத்தாத இலங்கை அரசாங்கம் தற்போது இந்த புதிய கடற்றொழில் சட்ட திருத்தத்தை யாருக்காக கொண்டு வருகிறது? யாருடைய தேவையை நிறைவேற்றுவதற்காக கொண்டு வருகிறீர்கள்?

இந்த அரசாங்கம் கடற்றொழில் மக்கள் மீதும் கடல் மீதும் எங்களுக்கு இருக்கின்ற உரிமையை பறித்து பல்தேசிய கம்பனிகளுக்கு விற்பதற்காகவே இந்த புதிய சட்டத்தை அவசரப்பட்டு கொண்டுவருகின்றனர்.

பல்தேசிய கம்பனிகளுக்கும் பல்தேசிய நாடுகளுக்கும் எங்களை அடிமையாக்குவதற்குரிய செயற்பாட்டிற்காகவே இந்த சட்டம் கொண்டுவரப்படுகிறது. கடல் எங்களுக்கு உரியது. கடல் மீது மீனவர் சமூகத்திற்கு இருக்கின்ற உரிமையும் அதன் மீது இருக்கின்ற மீனவர்களது வாழ்வாதாரம் சம்பந்தப்பட்ட விடயங்களையும் இல்லாதொழிப்பாற்காகவே இந்த அரசாங்கம் திட்டமிட்ட வகையில் மறைமுக நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இந்த புதிய சட்டத்தை கொண்டு வருகிறது.

இதற்கு இலங்கையில் உள்ள உலக வங்கி அதிகாரிகளும் துணைபோகின்றார்கள். அவர்கள் சாத்தியக்கூற்று அறிக்கை ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். அது எங்களுக்கு பொருத்தமில்லாதது. அதனை மீனவ சமூதாயம் ஏற்றுக்கொள்ளவில்லை. கடற்றொழிலாளர்களால் நீராகரிக்கப்பட்ட அந்த சாத்தியக் கூற்று அறிக்கையின் அடிப்படையிலேயே இலங்கை அரசாங்கம் புதிய சட்டத்தை உருவாக்கியுள்ளது. இதன்மூலம் வடக்கு கிழக்கு தமிழ் கடற்றொழிலாளர்களது பிரதேசங்களையும் தமிழ் கடலையும் அழிப்பதற்கு உலக வங்கியும் துணைபோகின்றது.

தமிழ் கடலை காப்பாற்றுவதற்கு வடக்கு-கிழக்கு மீனவ சமூகம் ஒன்றிணையவேண்டும். புதிய கடற்றொழில் சட்டத்தை வடக்கு கிழக்கு மீனவர்கள் ஒட்டுமொத்தமாக நிராகரிக்க வேண்டும்.

அதேநேரத்தில், இன்றைய சர்வதேச மீனவர் தினத்திலாவது இலங்கை அரசாங்கமும் துறை சார்ந்தவர்களும் மீனவர்களது உரிமையையும் மீனவர்களுக்கு கடல் மேல் இருக்கின்ற உரிமையை எங்களது வாழ்வாதாரத்தையும் காப்பாற்றுவதற்கு அர்ப்பணிப்போடு செயற்பட முன்வர வேண்டும் என மீனவர்கள் சார்பில் தயவாகக் கோரி நிற்கின்றோம்-என்றார்.

(அ-2)

# சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவில் நேற்று சைக்கிள் பவனி




முல்லைத்தீவு, நவ. 22

சர்வதேச மீனவர் தினத்தினை முன்னிட்டு கவனயீர்ப்பு ஊர்வலம் ஒன்று நேற்று முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவில் இடம்பெற்றது.

ஆரோக்கியமான கடல் சுற்றுச்சூழல் அமைப்புக்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தல் மற்றும் உலகில் நிலையான மீன் வளங்களை உறுதி செய்தல் எனும் தொனிப்பொருளில் சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சைக்கிள் ஊர்வலமானது சிலாவத்தை சந்தியில் இருந்து ஆரம்பமாகி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நிறைவு பெற்றது.

இதில் பங்கேற்ற மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை வெளிப்படுத்தும் வகையில் பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன், சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், மீனவர்கள் , இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சி மத்திய கல்லூரி தேசிய மட்டத்தில் சாதனை



கிளிநொச்சி, நவ. 22

அகில இலங்கை தமிழ்மொழித்தின கர்நாடக சங்கீதப் போட்டியில் 4 நிகழ்வுகளில் தேசிய ரீதியாக முதலிடம் பெற்று கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்கள் வரலாற்று சாதனை ஏற்படுத்தியுள்ளனர்.

பல்லியம் குழு, புல்லாங்குழல் தனி (சிரேஸ்ட பிரிவு), புல்லாங்குழல் தனி (கனிஸ்ட பிரிவு) குழு இசை (நம் நாட்டுப்பாடல்) போன்ற நிகழ்வுகளில் இக்கல்லூரி மாணவர்கள் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றுள்ளனர்.

(அ)

# வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியைக் கைது செய்க!

## அங்கஜன் எம்.பி கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 22

மனித உரிமைகளை மதிக்காது மிருகத்தனமாக செயற்பட்ட யாழ்ப்பாணம்-வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உடனடியாக தண்டிக்கப்படவேண்டும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்-பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலால் இளைஞன் ஒருவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படும் நிலையில் அது தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.




இது தொடர்பாக அவர் தனது அறிக்கையில்-

சித்தங்கேணியைச் சேர்ந்த 26வயதான நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞன் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறான பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகள் யாழ். மாவட்டத்தில் இடம்பெறுவது இதுவே முதல் தடவை அல்ல. ஆனால் இதுவே இறுதிச் சம்பவமாக இருக்க வேண்டும்.

சந்தேக நபர்களை தாக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை. இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கே உண்டு. ஆனால் இங்கு பொலிஸார் சந்தேக நபர்களை வலுக்கட்டாயமாக குற்றவாளிகளாக்கி விடுகின்றார்கள்.

சந்தேக நபர்களை மனிதராக மதிப்பதுமில்லை. மனித உரிமைகளை மதிக்கத் தெரியாத பொலிஸார் எந்தத் தருணத்திலும் பொலிஸாராக இருக்கத் தகுதியற்றவர்கள்.

வட்டுக்கோட்டைப் பொலிஸார் கைது செய்த இளைஞனை பொலிஸ் காவலரனில் வெளிப்படையாக காட்சிப்படுத்தவில்லை, இளைஞனின் குடும்பத்தாரிடம் இளைஞனை வெளிப்படுத்தவில்லை, எல்லாவற்றுக்கும் மேலாக 24மணித்தியாளத்திற்குள் நீதிமன்றில் முற்படுத்த வேண்டிய சந்தேக நபரை நான்கு தினங்கள் பிரத்தியேக மறைவிடம் ஒன்றில் வைத்து உணவு கொடுக்காது மிருகத்தனமாக தாக்கியுள்ளனர்.

இளைஞனது மரணத்திற்கு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையைப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சகல பொலிஸாரும் பொறுப்புக் கூற வேண்டும். உடனடியாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் இளைஞனது மரணத்துடன் தொடர்புபட்ட பொலிஸார் அனைவரது பதவிகளும் பறிக்கப்பட்டு - கைது செய்யப்பட்டு பக்கச்சார்பற்ற விசாரணை இடம்பெற்று தண்டனை வழங்கப்பட வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் சந்தேக நபர்களை மறைத்து வைத்து தாக்கி தமது வாக்குமூலங்களை திணிப்பதற்கான பிரத்தியேக இடங்கள் இருப்பதனை அறிய முடிகிறது.

மனித உரிமைகளை பேணும் நிறுவனங்கள் பலவும் செயற்பட்டு வரும் நிலையில் பொலிஸாரின் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. உயிரிழந்த இளைஞனது குடும்பத்திற்கு நீதி கிடைக்க வேண்டிய அதே நேரம் இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் இருப்பதனையும் உறுதி செய்யவேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

(அ)

## போர் பாதித்த....

நேற்று பாராளுமன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆனாலும் எந்த விதத்திலேயும் ஒரு விசேட செயற்பாடு எதுவுமே நடை பெறவில்லை. ராஜபக்ஷ தரப்பு காலத் தில் இந்த விடயங்களை நாங்கள் எதிர் பார்க்க முடியாது. ஏனெனில் -அவர்க ளுடைய மனோநிலை முற்றிலும் தமிழர் களுக்கு எதிரானதாகவே இருந்தது.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு சேர்ந்து ஆட்சி புரிந்த நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க் கட்சியில் இருந் தும் கூட முழுமையாக ரணில் தரப்பை ஆதரித்துக் கொண்டிருந்த காலத்தில் வரவு-செலவுத் திட்டத்தில் வடக்கு- கிழக்குக்கு என விசேடமாக நிதி ஒதுக்கப்படவில்லை என்ற விடயங்களை சுட்டிக்காட்டினோம்.

நாங்கள் கேட்பது ஒரு விசேட ஏற்பாட்டையேயாகும். அவ்வாறு வரவு-செலவுத்திட்டத்தில் ஒரு சதமும் வடக்கு-கிழக்குக்கு ஒதுக்கப்பட்டிராத நிலையில் - மக்கள் மட்டத்தில் குழப் பங்கள் ஏற்பட்ட நிலையில் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தங்களால் தமது தொகுதிகளுக்கு போகமுடிய வில்லை என்றும், அப்படிப்பட்ட ஒரு நிலையை நீங்கள் உருவாக்கியிருக்கி றீர்கள் எனவும் அரசாங்கத்திடம் கூறிய போது, நாங்கள் வரவு-செலவுத் திட் டத்தில் இந்த விடயத்தை சேர்க்காமல், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலம் விசேட செயற்திட்டத்தினை செய்து வடக்கு கிழக்கை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப் போகின்றோம் என்று 2015 இல் குறிப்பிட்டார்கள்.

ஆனால் 2020 வரைக்கும் 52 நாட்கள் ஏற்பட்ட குழப்பத்தை நீக்கி பார்த்தால் எந்தவொரு ஏற்பாடும் நடைபெற்றிருக்க வில்லை.

வெறுமனே சில நூறு மில்லியன் களை தங்களது எடுபிடிகளுக்கும், தமது அரசாங்கத்தில் இருந்தவர்களுக்கும் வழங்கி தமது வாக்கு வங்கியைத் தக்க வைப்பதற்காக கொடுக்கப்பட்டது.

அந்த நிதிகள் தாங்கள் ஏதோ செய்வ துபோல காட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதே தவிர, போரால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தை கட்டியெழுப்புவதற்கான எந்தவொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை.

அப்படிப்பட்ட ஒரு பின்னணியில் தான் இந்த வரவு-செலவுத் திட்டம் இன்று சமர்ப்பிக்கப்பட்டு, இந்த வரவு- செலவுத் திட்டத்தில் முதற் தடவையாக வடக்கு-கிழக்கிற்கு 4 தலைப்புக்களின் கீழ் - பூநகரி சுண்ணக் கல் செயற்பாடு, காணாமல் ஆக்கப்பட் டோருக்கு 1 பில்லியன் ஒதுக்கீடு, பாலியாறு தண்ணீர் திட்டம், 2500 மில்லியன் வீட்டுத்திட்டத்துக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீடு ஒட்டுமொத்த வரவு-செலவுத் திட்டத்தில் 0.11 வீதமேயாகும். இந்த நிலையில்தான் இனப்பிரச்னைக்கு காணி பொலிஸ் அதிகாரமற்ற மாகாண சபை 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக உலகத்துக்கு பூச்சாண்டி காட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால் அந்தப் பேச்சுவார்த்தைக்குப் போனவர்கள் இங்கே இருக்கிறார்கள். பேச்சுவார்த்தைக்குப் போனவர்களிடம் ஏதோ செய்யப்போவதாக கூறிய நிலையில், அவர்களும் ஏதோ தரப்போகிறார்கள் என்றே கதைகளைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த நிலையில் வடமாகாணத்துக்கு ஒரு வீதம் மட்டும் தான் ஒதுக்கப்பட் டுள்ளது. கிழக்கு மாகாணத்துக்கும் 1.17 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. வடமாகா ணம் ஊவா மாகாணத்துக்கு அடுத்து அடிநிலையில் இருக்கிறது. வடக்கு மாகாணம் போரால் பாதிக்கப்பட்ட பிரதேச மாகவும் உள்ளது.

இனப்பிரச்னைக்கு தீர்வு வழங்கப் போவதாக சொல்லும் நிலையில் கூட வடக்கு-கிழக்குக்கான விசேட கட்டமைப்பை உருவாக்குவதற்கு அரசாங்கம் தயாரில்லை என்றால் அரசாங்கத்தின் மனோநிலையை நாம் நன்கு புரிந்துகொள்ளலாம்.

இந்த அரசாங்கத்தினுடைய தற்போதைய வரவு-செலவுத் திட்டம் ஒரு கற்பனையான வரவு-செலவுத் திட்டம் எனவும், உரிய பட்சம் அவர்கள் கூறியுள்ள இலக்குகளை அடையக்கூடிய வகையில் அமையவில்லை என்றும் பிட்ச் ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதே பிட்ச் ஆய்வு மையம் தான் இரண்டு வருடங்களுக்கு முன்பு இலங்கை யில் பொருளாதார நெருக்கடி ஏற்படப்போவதாக முன்னரேயே எதிர்வுகூறியிருந்தது.

குறித்த வரவு செலவுத்திட்டம் கற் பனையானது மற்றும் சாத்தியமற்றது என ஆய்வுகள் சொல்லப்படுகின்ற நிலையில், ஒப்புக்காக சொல்லப்பட் டுள்ள இந்த ஒதுக்கீடுகள் கூட கிடைக்கும் என்பது ஐமிச்சமானதாகும்.

இப்படிப்பட்ட பின்னணியில் , இந்த விடயங்கள் தமிழ் மக்களுக்கு ஏமாற்ற மாக இருக்கும் இடத்தில், வரவு செலவுத் திட்டம் கற்பனையாக பார்க்கப்படும் நிலையில் இந்த வரவு செலவுத் திட்டம் ஏற்கப்படும் நிலையில் இல்லை. இத னால் எமது அமைப்பு இந்த வரவு-செல வு திட்டத்தை எதிர்க்கிறது-என்றார். (அ)

## மாவீரர்....

பல்கலைக்கழகத்தில் முதல் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று இடம் பெற்றன.

அதன்படி நேற்று யாழ்.பல்கலைக்க ழக வளாகத்தில் உள்ள மாவீரர் நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப் பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு, பல்கலைக் கழக வளாகத்திலுள்ள மாவீரர் நினை வுத்தூபி அமைந் துள்ள பகுதி மாணவர்களால் வர்ணம் தீட்டப் பட்டு புதுப்பொலிவு பெற்றுள்ளது.

இதேவேளை, உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்திலும் மாவீரர் நினைவு வாரத்தின் முதல் நாள் நினைவேந்தல் நேற்று இடம்பெற்றது.

அதேபோன்று கிளிநொச்சி, மன் னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட் டங்களிலும் நேற்று மாவீரர் வாரம் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் ஆரம்ப மாகின.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரை போராட் டக்களத்தில் தியாகம் செய்தவர்கள் நினைவாக, கார்த்திகை 27 ஆம் திகதி, மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இதற்கு தடை விதிக்க கோரிய பொலிஸாரின் பல மனுக்கள் நீதிமன்றங்களினால் நிராகரிக்கப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சடலத்துடன்....

குறித்த இளைஞனின் இறுதிகிரியைகள் சித்தங்கேணி யில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனகிரி யைக்காக மயானத்திற்கு எடுத்து செல்லும் போது அப் பகுதி மக்களால் குறித்த கவன யீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது " அலெக்ஸ் இறந்து 48 மணி நேரம் கடந்தும் இது வரையில் எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸ் விசாரணைக்குழு 48 மணி நேரத்திற்கு மேலாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். எனினும் பொலிசாரின் விசாரணை மீது எமக்கு திருப்தி ஏற்படவில்லை. மாறாக அவர்கள் மீது சந்தேகம் தான் வலுத்து வருகின்றது" எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வடக்கின்...

மாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆளுநரால் இதன்போது சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மிற்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. விடயங்களை கேட்ட றிந்துக்கொண்ட ஜனாதிபதியின் சர்வ தேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல் ஹெய்ம், இலங்கை விஜயத்தின் போது, வடக்கு மாகாண ஆளுநரை முதலில் சந்திக்க கிடைத்தமையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதாக கூறினார்.

இலங்கையின் வளர்ச்சிக்கான பசுமை திட்டங்களை முன்னெடுப்பதில் தாம் மகிழ்ச்சியடைவதாக சர்வதேச கால நிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

சூரிய, காற்றாலை, நீர் மின் உற்பத் திக்கான வளங்களை இலங்கை கொண்டுள்ளமையால், பச்சை ஹைட் ரஜன் திட்டத்தை மேற்கொள்ள முடியும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும், ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், கௌரவ ஆளுநரிடம் உறுதியளித்தார். (அ)

## பாராளுமன்ற....

தொடர்பில் உயர் நீதிமன்றத் தீர்ப் பின்படி, ராஜபக்ஷக்களிடம் இருந்து நட்டத்தை மீட்பீர்களா என எதிர்க் கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

கேள்வி முன்வைக்கப்பட்டபோது, ஆளும் கட்சி உறுப்பினர்கள் தொடர்ச்சி யாக கூச்சலிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை மாணவர்களும் பார்வை யாளர் அரங்கில் காத்திருந்ததாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரி வித்தார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபே வர்தன, எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டாரவிடம் இந்த சம்பவத்தை வீடியோ எடுக்கவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து, பாராளுமன்ற நடவ டிக்கைகளை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு சபாநாயகர் தீர்மானித் தார். (அ)

## புதைகுழி....

கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது இரண் டாவது நாளாக நேற்று இடம்பெற்று நிறைவடைந்த தன் பின்னர் ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு அவர்கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனிதப்புதை குழி இரண்டாவது கட்ட அகழ்வுப்பணி இடம் பெற்றிருந்தது. இன்று இரு மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந் தெடுக்கப்பட்டன. அந்த எலும்புக் கூட்டு உடற்பகுதியில் இருந்து துப்பாக் கிச் சன்னங்கள், குண்டு சிதறல்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் இலக்க தகடு ஆகியன எடுக்கப்பட்டன.

இலக்க தகடுகள் தொடர்பான விடயங்கள் பின்னர் அறியத்தரப்படும். தொடர்ந்து இப்பணி முன்னெடுக்கப் படும் . எதிர்வரும் 24அம் திகதி வெள் ளிக்கிழமை விசேட ஸ்கான் இயந்திரம் மூலம் இவ் மனித புதைகுழியானது எவ்வளவு தூரம் வியாபித்து இருக் கின்றது? எத்தனை படைகளில் எலும் புக்கூடுகள் அடுக்கப்பட்டிருக்கின்றன எனும் தகவலை அறிவதற்காக சோதனை நடைபெறும்.

களனி பல்கலைக்கழக தொல் பொருள் பீடத்தினரே குறித்த ஸ்கான் இயந்திரத்தினை கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது-என்றார். (அ)

## நினைவு...

அனுஷ்டிக்க தடை விதிக்க கோரியே பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

நினைவு கூரும் உரிமையை யாரும் தடை செய்ய முடியாது என்றும் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் இல்லாமல் நினைவுகூர முடியும் எனவும் தெரிவித்து நீதிமன்றம் பொலிஸாரின் விண்ணப்பத்தை மன்று நிராகரித்துள் ளது.

இதேவேளை, மாவீரர் நினைவேந்தலை தடை செய்யக் கோரி அச்சுவேலி மற்றும் தெல்லிப்பழை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களும் மல்லாகம் நீதவான் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.(அ)

## பட்ஜெட்....

மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி மற்றும் சுதந்திர கட்சியும் ஜி.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

இதேவேளை, குழுநிலை அல்லது மூன்றாம் வாசிப்பு விவாதம் இன்று முதல் டிசெம்பர் 13 ஆம் திகதி வரை 19 நாட்களுக்கு நடத்த தீர்மானிக்கப்பட் டுள்ளது.

அதன்பின், 2024ஆம் நிதியாண்டுக் கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு அன்றையதினம் மாலை 6:00 மணிக்கு நடத்தப்படும்.

முன்மொழியப்பட்ட திட்டத்தின் மூலம் தேசத்திற்கான புதிய பாதையை உருவாக்க அனைத்து அரசியல் கட்சிக ளின் ஒத்துழைப்பையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

2024 நிதியாண்டுக்கான பட்ஜெட் பற்றாக்குறை 2,851 பில்லியன் என்ப தோடு மொத்த வருவாய் 4,107 பில்லி யனாகவும் மொத்த செலவினம் 6,978 பில்லியனாகவும் உள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

## ஓ.எல்.....

உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் இன்னும் சில தினங்களில் வெளியிட இருக்கின் றோம். அதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் முடியும் தறுவாயில் இருக்கின்றன. அத்துடன் நாங்கள் இந்த முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை வரலாற்றில் முதல் தடவையாக ஒருமாத காலத்தில் வெளியிட நடவடிக்கை எடுத்தோம்.

அதேநேரம் கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை நடத்த தேவை யான அனைத்து ஏற்பாடுகளும் தயார்ப் படுத்தி முடித்திருக்கிறோம்.

கடந்த வருட உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் விடைத்தாள் பதிப்பிடும் நடவடிக்கை பிற்படுத்தப்பட்டதால் 3 மாதங்கள் வரை பிற்படுத்தப்பட்டது. அவ்வாறு இல்லாவிட்டால் உயர்தரப் பரீட்சையை இந்த மாதம் ஆரம்பிக்கவே தீர்மானித்திருந்தோம்.

அத்துடன் நாடு பொருளாதார நெருக்கடியில் இருக்கின்றபோதும் தற்போது படிப்படியாக ஸ்திர நிலைக்கு வருகிறது. அதனால் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் நாங்கள் பாடசாலைகளுக்கான அச்சுப்புத்தகங்க ளுக்காக 19 பில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.

அச்சுப்புத்தகம் அச்சிடும் நடவ டிக்கை தற்போது முடிவடையும் நிலை யில் இருக்கிறது ஜனவரியாகும்போது அனைத்து பாடசாலைகளுக்கும் அச்சுப் புத்தகம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் 8இலட்சம் மாணவர்களுக்கு பாதணி வழங்குவதற்காக பண வவுச்சர் வழங்க தீர்மானித்திருக்கிறோம். அதே போன்று ஆரம்ப பிரிபு மாணவர்களுக்கு பகல் உணவு வழங்க நடவடிக்கை எடுக் கப்பட்டிருக்கிறது. அதற்காக 16 பில்லி யன் ஒதுக்கப்பட்டிருக்கிறது-என்றார்.

ஈழநாடு
Eelanadu

# வட்டுக்கோட்டை சம்பவம் குறித்து ஆராய்வதற்கு மூவர் அடங்கிய குழு

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

**வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமை யாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒரு சிலரால் விரும்பத்தகாத செயல்பாடு தொடர்பில் மூன்று உயர் அதிகாரிகள் அடங்கிய விசாரணைக் குழுவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகந்தர்கள் சிலரால் சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவன் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதவிப் பொலிஸ் அத்திட்சகர், யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி ஆகியோர் அடங்கிய குழுவினர் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் நான்கு உத்தியோகத்தர்கள் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளார்கள் என இனங்காணப்பட்டதன் அடிப்படையில் அவர்கள் நால்வரும் தற்போது மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்வாங்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விரைவில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் இந்த விடயம் தொடர்பில் பொலிஸ்மா அதிபரினாலும் எமக்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையம் ஒன்றில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை தொடர்பில் உரிய விசாரணைகள் நடைபெற்று விசாரணை முடிவில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள். எனவே குறித்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் நான்கு உத்தியோகத்தர்கள் இடமாற்றப்பட்டுள்ளார்கள். ஏனென்றால் அவர்கள் அதே இடத்தில் கடமையாற்றினால் அங்குள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை அழித்து விடுவார்கள் என்ற காரணத்தினால் இடம் மாற்றி விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதே உண்மை.

பொலிஸ் உயர் மட்டத்தில் விசாரணைகளை விரைவாக செயற்படுத்துமாறு அழுத்தம் பிரயோகித்துள்ளோம் - என்றார். (அ)

---

### கைதான இளைஞர் மரணம்:

## வட்டு. பொலிஸாரிடமிருந்து மாற்றப்பட்டுள்ளது வழக்கு!

யாழ்ப்பாணம், நவ. 22

வட்டுக்கோட்டையில் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞன் தாக்கப்பட்டு உயிரிழந்த நிலையில், இந்த வழக்கு வட்டுக்கோட்டை பொலிஸாரிடமிருந்து மாற்றப்பட்டுள்ளதாக சட்டத்தரணி க. சுகாஸ் தெரிவித்தார்.

திருட்டு வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களும், சட்டவிரோதமான முறையில் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டை தொடர்ந்து, இரண்டு இளைஞர்களும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞன் ஒருவரே உயிரிழந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மற்றைய சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அத்துடன், வழக்கு வட்டுக்கோட்டை பொலிஸாரிடமிருந்து மாற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி க.சுகாஸ் முன்னிலையாகியிருந்தார். (அ)

---

## இந்திய கடற்படையினரால் இலங்கை மீனவர்கள் கைது!




சென்னை, நவ. 22

இந்திய கடற்படையினரால் இலங்கை மீனவர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தை அடுத்த தனுஷ்கோடி அருகே எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறியே குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

---

## மகிந்தவின் குடியுரிமையை பறிக்க தொடர்ந்து முயற்சி!

### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 22

போரை முடிவுக்கு கொண்டுவந்ததில் இருந்தே மகிந்த ராஜபக்ஷவின் குடியுரிமையை பறிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுவந்தன என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச கொள்கையின் அடிப்படையிலேயே வரி குறைப்பு செய்யப்பட்டது. அதற்கு பாராளுமன்றத்தில் எதிரணிகளும் வாக்களித்துள்ளன. ஆனால் நாம் பொறுப்பு கூறவேண்டும் எனக் கூறப்படுகின்றது. எனவே , எதிர்காலத்தில் வரி அதிகரிப்பு இடம்பெற்றால் அதற்கும் சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்பு கூறவேண்டும்.

மகிந்த ராஜபக்ஷவின் குடியுரிமையை பறிப்பதற்கான முயற்சி இன்று எடுக்கப்பட்டது அல்ல, போரை முடிவுக்கு கொண்டுவந்த நாளில் இருந்து அதற்கான முயற்சி இடம்பெறுகின்றது. அத்துடன், அறகலய காலத்தில் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களை வீட்டுக்குள் வைத்தே கொலை செய்துவிட்டு தீ வைத்து எரிப்பதற்கு முற்பட்டனர். அந்த முயற்சியும் கைகூடவில்லை. அதனால்தான் வரி குறைப்பு செய்ததை அடிப்படையாகக்கொண்டு தற்போது இந்த முயற்சி இடம் பெறுகின்றது.

நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு தொடர்பில் சட்ட ஆலோசனை பெற்றுவருகின்றோம்-என்றார். (அ)

---

## உயிரிழந்த சித்தங்கேணி இளைஞருடன் கைதான மற்றைய இளைஞருக்கு பிணை!

யாழ்ப்பாணம், நவ. 22

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு உயிரிழந்த இளைஞருடன் கைதான மற்றைய இளைஞன் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் சித்தங்கேணி பகுதியை சேர்ந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞனை கடந்த 08ஆம் திகதி திருட்டுச் சம்பவம் ஒன்றின் விசாரணைக்காக வட்டுக்கோட்டை பொலிஸார் அழைத்துள்ளனர்.

இந்நிலையில் தனது நண்பனுடன் குறித்த இளைஞன் பொலிஸ் நிலையம் சென்றிருந்த நிலையில் இருவரையும் கைது செய்த பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த அலெக்ஸ் பொலிஸாரினால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இளைஞனின் உயிரிழப்பை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்று பரிசோதனையில், உடலில் சித்திரவதை காயங்கள் காணப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதேவேளை, பொலிஸார் தன்னை எவ்வாறு சித்திரவதைக்கு உட்படுத்தினார்கள் என்பது குறித்து இளைஞன் உயிரிழப்பதற்கு முன்னர் கூறிய வீடியோவொன்றும் இணையத்தில் வெளியாகிப் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்நிலையில் உயிரிழந்த இளைஞனின் நண்பன் மீதான திருட்டுக் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த இளைஞர் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. (அ)

---

## முள்ளியவளையில் மாவீரர்களின் பெற்றோர்கள் நேற்று கௌரவிப்பு

முல்லைத்தீவு, நவ. 22

முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் ஞானதாஸ் யூட்சன் தலைமையில் இடம்பெற்றது.

மாவீரர்களது பெற்றோர்கள் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு முதல் நிகழ்வாக உயிர்த்தியாகம் செய்த இரண்டு மாவீரர்களின் பெற்றோரான மரிய கொலஸ்ரி, செந்தாமரை அம்மா ஆகியோரினால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. நிகழ்வின் இறுதியில் மாவீரர்கள் இந்த மண்ணிற்கு ஆற்றிய உயிர்த்தியாகம் தொடர்பான நினைவுரைகள் இடம்பெற்றதுடன் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கான தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தபிசாளர்களான க.விஜிந்தன், க. தவராசா, பிரதேச சபையின் உறுப்பினர் த.அமலன், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

---

## இலங்கையில் நடக்க இருந்த உலகக்கிண்ண போட்டி ரத்து

கொழும்பு, நவ. 22

இலங்கையில் 2024ஆம் ஆண்டு நடத்தப்படவிருந்த 19 வயதிற்குட்பட்ட உலக கிண்ண கிரிக்கெட் போட்டி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் குறித்த போட்டியை தென்னாபிரிக்காவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் தற்போது நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதெச கிரிகெட் பேரவை இலங்கை கிரிக்கெட்டை தடை செய்திருக்கும் வேளையிலேயே இந்த தீர்மானம் எடுக்கபட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த போட்டியில், இலங்கை, ஆப்கானிஸ்தான், ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், இங்கிலாந்து, இந்தியா, அயர்லாந்து, பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கா, வெஸ்ட் இண்டீஸ், ஜிம்பாப்வே ஆகிய நாடுகளின் வீரர்கள் கலந்துகொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், பிராந்திய தகுதி மூலம் நமீபியா, நேபாளம், நியூசிலாந்து,ஸ்காட்லாந்து, அமெரிக்கா ஆகியவையும் போட்டியிடும். தென்னாப்பிரிக்கா 1998ஆம் ஆண்டுக்குப் பிறகு மூன்றாவது முறையாக போட்டியை நடத்துகின்றது.

2024ஆம் ஆண்டு ஜனவரி 13 ஆம் திகதி ஆரம்பமாகும் குறித்த கிரிக்கெட் போட்டி பெப்ரவரி 9 வரை நடைபெறும். நடப்பு சாம்பியனான இந்தியா ஜனவரி 14 ஆம் திகதி வங்காளதேசத்திற்கு எதிராக தனது போட்டியை தொடங்கும். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கோலியை ஆட்டமிழக்க செய்தபோது நிலவிய அமைதி சிறப்பான தருணம்!

ஐசிசி உலகக் கிண்ண கிரிக்கெட்போட்டியின் இறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது. இந்த வெற்றி குறித்து பட் கம்மின்ஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இறுதிப் போட்டியில் இந்திய அணியை வீழ்த்தி கோப்பையை வென்றது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இது நீண்ட நாட்களுக்கு நினைவில் நிற்கும். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் கூடியிருந்த நரேந்திர மோடி ஸ்ரேடியத்தில், விராட் கோலியை ஆட்டமிழக்கச் செய்தபோது மைதானத்தில் அமைதி நிலவியது. அது நான் மைதானத்தில் அனுபவித்த இனிமையான தருணமாகும். அப்போது மைதானத்தில் நிலவிய அமைதி எனக்கு மிகவும் திருப்திகரமாக இருந்தது. நான் அப்படித்தான் நினைக்கிறேன்.

விராட் கோலி மிகச் சிறந்த வீரர். அவர் பெரும்பாலான ஆட்டங்களில் சதங்களை விளாசிவிடுவார். அவரை விரைவில் ஆட்டமிழக்கச் செய்ததில் எனக்கு மகிழ்ச்சி. அப்போது மைதானத்தில் ஏற்பட்ட மயான அமைதியை உணர்ந்தேன். அது எனக்குத் திருப்தி அளித்தது.



நான் தங்கியிருந்த ஓட்டலில் ஏராளமான இந்திய ரசிகர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் நீல நிற உடையணிந்து மைதானத்தை நோக்கி நடந்து சென்றனர். அப்போது எனக்கு சிறிது பதட்டமாக இருந்தது. நான் எப்போதும் மிகவும் நிதானமாக இருக்கிறேன் என்று நினைப்பவன். ஆனால் இன்று காலை சிறிது பதட்டத்துடன்தான் இருந்தேன். ஆனால் மாலையில் நாங்கள் வெற்றியைப் பெற்றுவிட்டோம்-என்றார். (அ)

# ஐ.சி.சி உலகக் கிண்ண 11 பேர் அணியில் இலங்கை வீரர் !

2023 ஆம் ஆண்டு ஐசிசி உலகக் கிண்ண போட்டிக்கான அணியில் ஐந்து அணிகளைச் சேர்ந்த வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

சம்பியன் பட்டம் வென்ற அவுஸ்திரேலியா, இந்தியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து அணிகள் மற்றும் இலங்கையின் நட்சத்திரங்கள் அதில் இடம்பெற்றுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் சகலதுறை வீரரான க்ளென் மக்ஸ்வெல், சுழற்பந்து வீச்சாளர் அடம் சாம்பா, கே. எல். ராகுல், ரவீந்திர ஜடேஜா மற்றும் ஜஸ்பிரித் பும்ரா, ரோஹித் ஷர்மா மற்றும் மொஹமட் ஷமி என ஆறு இந்திய நட்சத்திரங்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.



1. குயின்டன் டி கொக் (விக்கெட் காப்பாளர்) (தென்னாபிரிக்கா) - 59.40 சராசரியாக 594 ஓட்டங்கள்
2. ரோஹித் சர்மா (அணித்தலைவர்) (இந்தியா) - 54.27 சராசரியாக 597 ஓட்டங்கள்
3. விராட் கோலி (இந்தியா) - 95.62 சராசரியாக 765 ஓட்டங்கள்
4. டேரில் மிட்செல் (நியூசிலாந்து) - 69 சராசரியில் 552 ஓட்டங்கள்
5. கே.எல் ராகுல் (இந்தியா) - 75.33 சராசரியில் 452 ஓட்டங்கள்
6. கிளென் மக்ஸ்வெல் (அவுஸ்திரேலியா) - 66.66 சராசரியில் 400 ஓட்டங்கள் மற்றும் 55 ஓட்டங்களில் ஆறு விக்கெட்டுகள்
7. ரவீந்திர ஜடேஜா (இந்தியா) - 120 ஓட்டங்கள் 40 மற்றும் 16 விக்கெட்டுகள்
8. ஜஸ்பிரித் பும்ரா (இந்தியா) - 18.65 சராசரியில் 20 விக்கெட்டுகள்
9. டில்ஷான் மதுஷங்க (இலங்கை) - 25 ஓட்டங்களில் 21 விக்கெட்டுகள்
10. அடம் சாம்பா (அவுஸ்ரேலியா) - 23 விக்கெட்டுகள்
11. மொஹமட் ஷமி (இந்தியா) - 24 விக்கெட்டுகள்
12. ஜெரால்ட் கோட்ஸி (தென்னாபிரிக்கா) - 20 விக்கெட்டுகள்

# ஏழாவது முறையாக ஏ.டி.பி பைனல்ஸ் பட்டத்தை வென்று நோவக் ஜோகோவிச்




இத்தாலிய வீரரான ஜொனிக் சின்னரை தோற்கடித்து ஏழாவது முறையாக ஏடிபி பைனல்ஸ் பட்டத்தை வென்று நோவக் ஜோகோவிச் சாதனை படைத்துள்ளார்.

குரூப் ஸ்டேஜில் அவரிடம் தோல்வியை தழுவிருந்தாலும் நேற்று முன் தினம் இத்தாலியின் டுரின் நகரில் நடைபெற்ற இறுதி போட்டியில் 6-3, 6-3 என்ற செட் கணக்கில் வீழ்த்தி நோவக் ஜோகோவிச் வெற்றிபெற்றார்.

மேலும் குறித்த தொடர் தனது வாழ்நாளில் தான் எதிர்கொண்ட முக்கிய தொடர்களின் ஒன்று என செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் தெரிவித்துள்ளார்.

2008, 2010-11, 2014-15 மற்றும் 2022-23 இல் சம்பியன் பட்டம் வென்ற நோவக் ஜோகோவிச்சிற்கு இது 7 ஆவது ஏடிபி பைனல்ஸ் பட்டமாகும்.

இதேவேளை, அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள போட்டிகள் தனது இலக்கு என்றும் நான்கு கிராண்ட்ஸ்லாம்கள் மற்றும் ஒரு ஒலிம்பிக் தங்கம் வெல்ல முடியும் என்கிற நம்பிக்கை உள்ளது என்றும் கூறியுள்ளார்.

# 75 வயதிலும் வெறும் காலுடன் ஓடி சர்வதேச சாதனை படைத்த முல்லைத்தீவு பெண்மணி




அண்மையில் பிலிப்பைன்ஸ் இல் நடைபெற்ற தேசிய மாஸ்டர்ஸ் மற்றும் சிரேஸ்ட பிரஜைகள் விளையாட்டுப் போட்டியில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட முள்ளியவளை, முல்லைத்தீவை சேர்ந்த திருமதி அகிலத்திருநாயகி (ஓய்வு பெற்ற சிறைச்சாலைகள் உத்தியோகத்தர்) இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

1500 மீற்றர் நெடுந்தூர ஓட்டம் , 5000 மீற்றர் நெடுந்தூர விரைவு நடை ஆகிய போட்டிகளில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கங்களையும், 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெங்கலப் பதக்கத்தையும், 5000 மீற்றர் நெடுந்தூர ஓட்டத்தில் நான்காம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். (அ)

# உலகக் கிண்ண கிரிக்கெட் இலங்கைக்கு 180,000 டொலர்!



13ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நிறைவு பெற்றுள்ள நிலையில் குழு நிலை போட்டியில் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு வெற்றிக்கும் ஐ.சி.சி 40,000 டொலரை வழங்கியுள்ளது.

இந்நிலையில் சம்பியன் பட்டம் வென்ற அவுஸ்ரேலியாவுக்கு 4 மில்லியன் டொலர்களும் இரண்டாவது இடத்தை பிடித்த இந்தியாவுக்கு 2 மில்லியன் டொலர்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், லீக் போட்டியில் வெளியேற்றப்பட்ட அணிகளுக்கும் வெற்றிக்கு ஏற்ற தொகைக்கு மேலதிகமாக ஒரு இலட்சம் டொலர் வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியா (4.28 மில்லியன்)
இந்தியா (2.36 மில்லியன்)
தென்னாபிரிக்கா (1.08 மில்லியன்)
நியூசிலாந்து (1 மில்லியன்)
பாகிஸ்தான் (260,000)
ஆப்கானிஸ்தான் (260,000)
இங்கிலாந்து (220,000)
பங்களாதேஷ் (180,000)
இலங்கை (180,000)
நெதர்லாந்து (180,000)

# சுரங்கப்பாதை விபத்து:

## 9-வது நாள் மீட்புப் பணியில் முதல் வெற்றி:

# 41 தொழிலாளர்களின் நிலை என்ன?

இந்தியாவின் உத்தராகண்ட் மாநிலம் உத்தர்காசி அருகே சுரங்கப்பாதை விபத்தில் உள்ளே சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை மீட்கும் பணி 10-வது நாளாக நீடிக்கிறது. இந்த மீட்புப் பணியில் தற்போது முதல் வெற்றி கிடைத்திருப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர். அத்துடன் தொழிலாளர்களை விரைவில் பத்திரமாக மீட்டுவிட முடியும் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

உள்ளே சிக்கியுள்ள 41 தொழிலாளர்களின் நிலை என்ன? மீட்புக் குழுவுக்கு கிடைத்துள்ள முதல் வெற்றி என்ன? மீட்புப் பணிகள் எந்த கட்டத்தில் உள்ளன? 41 பேரையும் மீட்டு வர இன்னும் எத்தனை நாட்கள் பிடிக்கும்?

**மீட்புப் பணியில் முதல் வெற்றி**

உத்தராகண்ட் மாநிலம் உத்தரகாசி சுரங்கப்பாதையில் சிக்கிய தொழிலாளர்களை மீட்கும் பணியில் ஈடுபட்ட குழுவினர், ஆறு அங்குல குழாயை நிறுவுவதில் வெற்றி கண்டுள்ளதாகக் கூறியுள்ளனர்.

அந்தக் குழாயின் மூலம் சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள தொழிலாளர்களுக்கு உணவுப் பொருட்கள், மருந்துகள் வழங்க முடியும் என்றும், உள்ளே சிக்கியுள்ள தொழிலாளர்களிடம் பேச்சு வார்த்தையும் நடத்த முடியும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் இயக்குநர் அன்ஷூம் கல்கோ இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பிடிஐ செய்தி நிறுவனத்தின் செய்தியின்படி, “சுரங்கப்பாதையில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பல்வேறு முயற்சிகளில் நாங்கள் முதல் வெற்றியை அடைந்துள்ளோம். இதற்காக நாங்கள் கடந்த ஒன்பது நாட்களாக பணியாற்றி வருகிறோம். இதுவே அவர்களை மீட்கும் முயற்சியின் முதல்படி, இதுவே எங்கள் முன்னுரிமை,” என அவர் கூறியுள்ளார்.

சிக்கியுள்ளவர்களை பாதுகாப்பாக மீட்பதற்கு தேவையான அனைத்து உபகரணங்களும் சேகரிக்கப்பட்டு விட்டதாகவும், இன்னும் இரண்டு நாட்களில் அனைத்தும் அங்கு வந்து சேரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

“பிஆர்ஓ நிறுவனம் உத்தரகாசி பக்கத்திலிருந்தும் மற்றும் பர்கோட் தளத்தில் இருந்தும் சாலை அமைக்கிறது. இயந்திரங்கள் மிகவும் கனமாக உள்ளதால், அவற்றை விமானத்தில் கொண்டு வர முடியாது. அவற்றை சாலை வழியாக மட்டுமே கொண்டு வர வேண்டும். இப்போது நாங்கள் இயந்திரங்களுக்காக காத்திருக்கிறோம்,” என்றார் அன்ஷூம் கல்கோ.

உத்தரகாசி மாவட்ட மாஜிஸ்திரேட் அபிஷேக் ரூஹெலா கூறுகையில், “பிஆர்ஓ நிறுவனம் நிலச்சுரங்கப்பகுதிக்கு செல்லும் சாலையை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. அது இன்று இரவு அல்லது நாளை காலை முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,” என்றார்.

இதைத் தவிர, டிஆர்டிஓ சார்பில் 20 கிலோ மற்றும் 50 கிலோ எடையுள்ள இரண்டு ரோபோக்களை சம்பவ இடத்திற்கு அனுப்பியுள்ளதாக கல்கோ தெரிவித்தார்.

“இந்த ரோபோ நிலத்தின் மேற்பரப்பில் நடந்து முன்னோக்கி நகர்கிறது, ஆனால் சுரங்கப்பாதையில் உள்ள தரையில் மணல் இருப்பதால், ரோபோ அங்கு செல்ல முடியுமா இல்லையா என்பதில் சந்தேகம் உள்ளது” எனக்கூறினார்.

உத்தராகண்ட் மாநிலம் உத்தரகாசி அருகே கட்டப்பட்டு வந்த சுரங்கப்பாதையில் நடந்த விபத்தால், உள்ளே சிக்கியுள்ள 40 இந்திய தொழிலாளர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது. இன்றுடன் அவர்கள் 10 நாட்களாகச் சுரங்கத்தில் சிக்கியுள்ளனர்.


**மீட்புப் பணிகளுக்காகப் புதிய இயந்திரம்**

முன்னர், மற்றொரு இயந்திரத்தைப் பயன்படுத்தி இடிபாடுகளின் ஊடாகத் துளையிடும் முயற்சி தோல்வியடைந்ததால், இந்த இயந்திரம் புதன்கிழமை (நவம்பர் 15) தில்லியில் இருந்து வரவழைக்கப்பட்டது.

இந்த இயந்திரம் இடிபாடுகளில் துளையிட்டு ஒரு பாதையை உருவாக்கும், அதில் ஒரு குழாய் நுழைக்கப்படும், அதற்குள் ஊர்ந்து சிக்கியிருக்கும் தொழிலாளர்கள் வெளியே வர முடியும்.

கட்டப்பட்டு வந்த சுரங்கப்பாதையின் ஒரு பகுதி நிலச்சரிவு காரணமாக இடிந்து விழுந்ததால், கடந்த ஞாயிற்றுக் கிழமை (நவம்பர் 12) அதிகாலை முதல் அவர்கள் உள்ளே சிக்கியுள்ளனர்.

சில்க்யாரா சுரங்கப்பாதையின் ஒரு




பகுதி, அதன் வாயிலிலிருந்து 200மீ தொலைவில், தொழிலாளர்கள் உள்ளே இருந்தபோது இடிந்து விழுந்தது. இடிபாடுகள் மூடியதால் தொழிலாளர்களுக்கு ஆக்ஸிஜன் விநியோகம் தடைபட்டது.

சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள தொழிலாளர்கள் பாதுகாப்பாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மீட்புக் குழுவினர் அவர்களுக்கு உணவு, தண்ணீர் மற்றும் ஆக்ஸிஜனை குழாய்கள் மூலம் வழங்கி, வாக்கி-டாக்கிகள் மூலம் அவர்களுடன் தொடர்பு கொண்டு வருகின்றனர்.

இருப்பினும், அவர்களில் சிலர் தலைவலி, பதட்டம் மற்றும் குமட்டல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக சில செய்தியறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆனால், பிபிசியிடம் பேசிய அதிகாரிகள், இதை மறுத்துள்ளனர்.

**தொழிலாளர்களை மீட்பதற்கான திட்டம் என்ன?**

மீட்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் நிறுவனத்தின் மூத்த அதிகாரியான பூபேந்திர சிங், இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தித்தாளிடம், உள்ளே சிக்கியுள்ளவர்களுக்குத் தகவல் தொடர்புக்கு உதவவும், உணவு மற்றும் ஆக்ஸிஜனை வழங்கவும் இடிபாடுகள் வழியாக மற்றொரு 12மிமீ குழாய் நுழைக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

மீட்புப் பணிகளுக்கான புதிய இயந்திரம் மூன்று பகுதிகளாக ராணுவ விமானம் மூலம் கொண்டுவரப்பட்டது.


ஒரு மணிநேரத்திற்கு 5 மீ வரை தோண்டும் அளவுக்கு இந்த இயந்திரம் சக்தி வாய்ந்தது என நிபுணர்கள் கூறுகின்றனர்.

இப்போதைய திட்டத்தின்படி, 900மிமீ விட்டம் கொண்ட உலோகக் குழாயைப் பொருத்தும் அளவுக்கு அகலமான துளையிடுவார்கள். அதன் பிறகு தொழிலாளர்கள் குழாய் வழியாக ஊர்ந்து சுரங்கப்பாதையில் இருந்து வெளியே வரலாம் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

**சிக்கலாகும் மீட்புப் பணிகள்**

ஆனால் உண்மையில் இது கடினமான செயல்முறை. இடிபாடுகள் அகற்றப்பட்ட பகுதிகளில் தளர்வான மண் மற்றும் பாறைகள் விழுந்துகொண்டே இருப்பதால், செயல்பாடு தடைபடுகிறது. அடிக்கடி நிலச்சரிவு ஏற்படுவதால், பணி மேலும் கடினமாகிவிட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

துளையிடும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதைத் தவிர, மீட்பு அதிகாரிகள் பூமியைத் தோண்டி இடிபாடுகளை அகற்ற முயன்றனர், ஆனால் இந்த முயற்சிகளும் தோல்வியடைந்தன.



**தொழிலாளர்கள் பற்றி அதிகரிக்கும் கவலைகள்**

நேரம் செல்லச் செல்ல, தொழிலாளர்களின் பாதுகாப்பு குறித்த கவலை அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடையே அதிகரித்து வருகிறது.

சில தொழிலாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் தங்கள் உறவினர்களின் உடல் நிலை குறித்து கவலையடைவதாகத் தெரிவித்தனர்.

உத்தராகண்ட் மாநிலம் உத்தரகாசி மாவட்டத்தில் உள்ள சில்க்யாரா சுரங்கப்பாதை, அம்மாநிலத்தில் உள்ள புகழ்பெற்ற இந்துப் புனிதத் தலங்களுக்கு இடையிலான இணைப்பை மேம்படுத்தும் மத்திய அரசின் நெடுஞ்சாலைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். பல இமாலய சிகரங்கள் மற்றும் பனிப்பாறைகள் அமைந்துள்ள உத்தராகண்ட் மாநிலம், இந்துக்களின் புனிதத் தலங்களைக் கொண்டுள்ளது.



# கட்சிகளை ஐக்கியப்படுத்தும் ஆகப் பிந்திய ஒரு முயற்சி!

நிலாந்தன்

கடந்த சனிக்கிழமை (17.11.23) யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. டான் டிவி குழுமத்தின் அனுசரணையோடு ஒரு சிவில் அமைப்பு அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. எல்லாக் கட்சிப் பிரமுகர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. கட்சிகளுக்கு இடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதே அந்த கருத்தரங்கின் நோக்கம். கட்சிகளோடு சமயப் பெரியார்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

ஐந்து மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் மொத்தம் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்திருந்தார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்தவர்கள் வரவில்லை. தமிழ் மக்கள் கூட்டணியை சேர்ந்தவர்களும் வரவில்லை. ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள், தலைவர்கள், இரண்டாம் நிலைத் தலைவர்கள் வந்திருந்தார்கள். மதத்தலைவர்களும் வந்திருக்கவில்லை.

பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தலைமை தாங்கினார். அரசியல் விமர்சகர்களான யதீந்திரா, நிலாந்தன் ஆகியோரும் மூத்த ஊடகவியலாளர் தனபாலசிங்கமும் உரையாற்றினார்கள். உரைஞர்களில் ஒருவராகிய பேராசிரியர் கணேசலிங்கன் வரவில்லை. உரைகளின் நோக்கம் ஐக்கியத்தை வலியுறுத்துவது. கட்சிகளுக்கு பேச சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

அந்நிகழ்வு இந்தியாவின் தூண்டுதலால் ஒழுங்கு செய்யப்பட்டது என்று ஒரு பகுதியினர் ஏற்கனவே எழுதத் தொடங்கி விட்டார்கள். 13வது திருத்தத்தை வலியுறுத்துவதே அந்த நிகழ்வின் நோக்கம் என்றும் ஊகங்கள் கிளம்பின. ஆனால் பிரதான பேச்சாளர்கள் யாருமே 13ஆவது திருத்தத்தைத் தொடவில்லை. ஐக்கியத்தின் தேவைதான் அங்கே வலியுறுத்தப்பட்டது. கட்சிகளின் தலைவர்கள் அமைதியாக அமர்ந்திருந்து கேட்டார்கள்.

அந்த உரைகளைக் கேட்டபின் அவர்கள் ஒற்றுமைப் படுவார்களா இல்லையா என்பது யாருக்கும் தெரியாது. கடந்த 14 ஆண்டுகளில் கட்சிகளை ஒற்றுமைப்படுத்த எடுக்கப்பட்ட ஆகப்பிந்திய முயற்சி அது. கடந்த சுமார் 14 ஆண்டுகளாக இது போன்ற நிகழ்ச்சிகள், சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இங்கே ஒரு சுவாரசியமான விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும். கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் அரசியலில் முன்னெடுக்கப்பட்ட ஒற்றுமை முயற்சிகள் பெரும்பாலானவற்றிக்குத் தலைமை தாங்கியது மன்னார் மாவட்டத்தை சேர்ந்தவர்களே.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த கையோடு அப்பொழுது மன்னார் மறைமாவட்ட ஆயராக இருந்த இராயப்பு யோசப் அவர்கள் அப்படி ஒரு முயற்சியை முன்னெடுத்தார். தமிழ் குடிமக்கள் சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட முதலாவது முயற்சி அது. ஆயர் ஜோசப், தமிழ் சிவில் சமூக அமையத்தின் கௌரவ தலைவராக இருந்தார்.

ஆனால் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை. “பிஷப் நீங்கள சொல்லுறதச் சொல்லுங்கோ. ஆனால், நாங்கள் தான் தீர்மானிப்பம் “என்ற தொனிப்பட சம்பந்தர் பதில் சொன்னார். அதன்பின் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த குடிமக்கள் சமூகம் ஒன்றின் தலைவராகிய சிவகரன் பல்வேறு நிகழ்ச்சிகளையும் சந்திப்புகளையும் ஒழுங்கு செய்துவந்தார். கடந்த 14 ஆண்டுகளில் ஒற்றுமை முயற்சிகளை அதிகமாக முன்னெடுத்தது அவர்தான்.

சிவகரனின் ஏற்பாட்டில் முதலாவது முயற்சி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. ஒரு கிறிஸ்தவ ஆலயத்தின் வளாகத்தில் இடம்பெற்ற அச்சந்திப்பில் கஜேந்திரகுமார்,கஜேந்திரன், ஆனந்தி போன்றவர்களும் வந்திருந்தார்கள். அச்சந்திப்பைத் தொடர்ந்து மேலும் சில சந்திப்புகள் யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் ஒழுங்கு செய்யப்பட்டன. ஒரு யாப்பை வரைவது வரை அம்முயற்சிகள் முன்னேறின. ஆனால் ஒரு கட்டத்துக்கு மேல் அது தோல்வியடைந்தது. அதற்கு பிரதான காரணம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான்.

எனினும் சிவகரன் ஓயவில்லை. பிறகோர் முயற்சி ஆனந்தசங்கரியின் கட்சிச் சின்னத்தை, அதாவது உதய சூரியன் சின்னத்தை வைத்துக்கொண்டு ஏதாவது செய்யலாமா என்று முயற்சிக்கப்பட்டது. ஆனந்தசங்கரியும் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஒத்துக் கொண்டார். ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒத்துழைக்கவில்லை. அந்த முயற்சியும் கைவிடப்பட்டது.

அதன்பின் பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு சந்திப்பை ஒழுங்குபடுத்தினார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதில் பங்கு பற்றியது. 13 அம்ச கோரிக்கைகள் அடங்கிய ஓர் ஆவணம் வெளியிடப்பட்டது. ஆனால் அந்த ஐக்கியம் கருவிலேயே கருகிவிட்டது.






ஆனால் சிவகரன் சோரவில்லை. மீண்டும் ஒரு முயற்சியைத் தொடங்கினார். அனைத்து கட்சிகளையும் ஒருங்கிணைத்து ஜெனிவாவுக்கு ஒரு செய்தியைக் கூற வேண்டும் என்பது அந்த முயற்சிகளின் நோக்கம். முதல் சந்திப்பு கிளிநொச்சியில். அதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்குபற்றவில்லை. ஆனால் சந்திப்பில் பங்குபற்றிய குடிமக்கள் பிரதிநிதிகள் இருவர் அடுத்த சந்திப்புக்கு தமிழ்த் தேசிய முன்னணி மக்கள் முன்னணியை அழைத்துக் கொண்டு வந்தார்கள். இதுபோன்ற ஐக்கிய முயற்சிகளில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியை அழைத்துக் கொண்டு வரத்தக்க தொடர்புகள் தமிழ் சிவில் சமூக அமையும் என்ற குடிமக்கள் சமூகத்துக்கு மட்டும்தான் இருந்தன.

அந்த ஐக்கிய முயற்சி அடுத்தடுத்த கட்டத்துக்கு வெற்றிகரமாக முன்னேறியது. முடிவாக கிளிநொச்சியில் நடந்த இறுதிக் கூட்டத்தில் ஐநாவுக்கு ஒரு கூட்டுக் கடிதம் எழுதுவது என்று முடிவெடுக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாசம் 21 ஆம் திகிதி ஒரு கடிதம் எழுதப்பட்டது. கடந்த 14 ஆண்டு கால தமிழ் அரசியலில் வெற்றிகரமாக மூன்று கட்சிகளையும் ஒருங்கிணைத்த ஒரு முயற்சியாக அதைக் குறிப்பிடலாம். ஆனால் அதுவும் பின்னர் தோல்வியடைந்தது. அந்த ஒருங்கிணைப்பு கடிதத்தோடு முடிந்து விட்டது. கடிதம் எழுதிய கட்சிகள் அதன் பின் ஒன்று மற்றதுடன் மோதத் தொடங்கின. சமாதானம் செய்த சிவில் சமூக பிரதிநிதிகளையும் விமர்சித்தன. அந்த முயற்சிக்குப் பின் எந்த ஒரு சிவில் சமூகமும் அது போன்ற ஐக்கியப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடத் தயாராக இருக்கவில்லை.

மேற்படி ஐக்கிய முயற்சிகளில் அதிகமாக உழைத்த சிவகரனும் பின்னர் சோர்ந்து விட்டார். பல்கலைக்கழக மாணவர்களும் இப்பொழுது எல்லாக் கட்சிகளையும் அழைத்து ஐக்கியப்படுத்தும் பலத்தோடு இல்லை. தமிழ் சிவில் சமூக அமையமும் பெருமளவுக்குக் களைத்து விட்டதாகத் தெரிகிறது.

இப்படிப்பட்டதோரர் தோல்விகரமான அனுபவப் பின்னணியில், மீண்டும் ஒரு ஐக்கிய முயற்சியை டான் டிவி குழுமம் தொடங்கியிருக்கிறது. ஒரு பலமான உள்ளூர் ஊடகம் என்ற அடிப்படையில், அரசியல்வாதிகள் டான் டிவி குழுமத்தோடு நல்லுறவைப் பேண விரும்புவார்கள். அந்தத் தங்குநிலையின் அடிப்படையில்தான் டான் டிவி அப்படி ஒரு நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தியிருக்கலாம். எனினும் எதிர்பார்க்கப்பட்ட ஒரு தொகுதி அரசியல்வாதிகள் வரவில்லை. சமயத் தலைவர்களும் வரவில்லை.

அந்த ஐக்கிய முயற்சிக்குள் கஜேந்திரகுமார் வரமாட்டார் என்பது தெளிவாகத் தெரிகிறது. விக்னேஸ்வரனையும் காணவில்லை. குத்துவிளக்கு கூட்டணிக்குள் காணப்படும் சில தலைவர்களையும் காணவில்லை. ஆயின், அந்த ஒருங்கிணைப்பு முயற்சியில் டான் டிவி குழுமம் முழு வெற்றி பெறுமா?

கடந்த 14 ஆண்டுகளில் தமிழ்த் தேசியப்பரப்பு சிதறிக் கொண்டு போகிறது. மெலிந்து கொண்டு போகிறது. வடக்கு கிழக்கு இணைப்பு பெருமளவுக்கு பலவீனம் அடைந்து விட்டது. கிழக்கில் கிழக்கு மையக் கட்சி ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை கொண்டிருக்கின்றது. அதாவது தாயகம் மனரீதியாக உடைக்கப்படுகின்றது.

இரண்டாவது,கடந்த 14 ஆண்டுகளில் ஏற்கனவே இருந்த பெரிய கூட்டு உடைந்து, சிதறி, சிறிய சிறிய கூட்டுக்களே உருவாகியுள்ளன. அவையும் பலமான இறுகிப் பிணைந்த கூட்டுக்கள் அல்ல.

மிகப்பெரிய கூட்டாக இருந்த கூட்டமைப்பிலிருந்து முதலில் கஜன் அணி வெளியேறியது. பின்னர் ஆனந்தி, சிவகரன் போன்றோர் வெளியேறினர். பின்னர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியேறினார். பின்னர் இடையில் வந்த விக்னேஸ்வரன் இடையிலேயே வெளியேறினார்.



முடிவில் புளட்டும் டெலோவும் வெளியேறின. இப்பொழுது தமிழரசுக் கட்சிக்குள்ளும் அடுத்த தலைவர் யார் என்ற போட்டி.

மூத்த பழைய கட்சியாகிய தமிழரசுக் கட்சி தன் தலைவரை இதுவரையிலும் தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யவில்லை. அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால் அப்படிப்பட்ட ஒரு தலைவர் இல்லாத வெற்றிடத்தில் இப்பொழுது தலைவருக்காக ஒரு தேர்தலை வைக்க வேண்டிய நிலைமை தோன்றியிருக்கிறது. அந்த தேர்தல் அக்கட்சியை மேலும் பலவீனப்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதாவது கடந்த 14 ஆண்டுகளில் ஐக்கியம் சிதறிக் கொண்டே போகிறது. கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய கட்சிகள் குத்துவிளக்குச் சின்னத்தின் கீழ் ஒரு கூட்டை உருவாக்கின. ஆனால் அதுவும் பலமானதாகத் தெரியவில்லை. அவர்கள் தங்களுடைய பலத்தை அடுத்த தேர்தலில் தான் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இவ்வாறு கட்சிகள் ஒருபுறம் சிதறுகின்றன. கட்சிகளில் நம்பிக்கை இழந்த, அல்லது தமிழ் அரசியலில் நம்பிக்கை இழந்த ஒரு தலைமுறை இலகுவாக அரசியல் நீக்கம் செய்யப்படுகிறது. “இந்த மண் எங்களின் சொந்த மண்” என்று பாடியது ஒரு காலம். கனடாவுக்கும் லண்டனுக்கும் எப்படிப் போகலாம் என்று தேடித்திரிவது இன்றைய யதார்த்தம். பெருமளவுக்கு இளையோர் வெளியேறுகிறார்கள். இவ்வாறு வெளியேறினால் எதிர்காலத்தில் தாயகத்தில் சனத்தொகை மெலிந்துவிடும். அதாவது வாக்காளர் தொகை குறைந்துவிடும். தமிழ் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைந்துவிடும்.

இதுதான் இப்போதுள்ள நிலைமை. ஒருபுறம் வடக்கு கிழக்கு இணைப்பு, அதாவது தாயகக் கோட்பாடு அதிகம் சோதனைக்கு உள்ளாகிறது. இன்னொருபுறம் கட்சிகள் சிதறுகின்றன. மூன்றாவதாக, மக்கள் நாட்டைவிட்டு வெளியேறுகிறார்கள். அதேசமயம் அரசாங்கம் நிலத்தைப் பறிக்கும் நடவடிக்கைகளையும் சிங்கள பௌத்தமயமாக்கலையும் முடுக்கி விட்டுள்ளது. இந்நிலையில் ஒற்றுமைப்படா விட்டால் தமிழ்மக்களுக்கு மீட்சியே இல்லை என்ற ஒரு பயங்கரமான நிலைமை தோன்றியிருக்கிறது.

இப்படிப்பட்டதோர் பாரதூரமான பின்னணியில், கட்சிகளையும் தனிப்பட்ட வாக்காளர் தொகுதிகளையும் கட்டியெழுப்ப முயற்சிக்கும் அரசியல்வாதிகள், தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற அடிப்படையில் சிந்திப்பார்களா? தேசத்தை கட்டியெழுப்புவதற்கான ஓர் ஐக்கியத்தை கட்டியெழுப்புவார்களா? டான் டிவியின் இந்த முயற்சி வெற்றியளிக்குமா?

சூரன் போரிலன்று நடந்த ஒரு நிகழ்ச்சி அது. சூரனை இந்துக்கள் அகம்பாவத்தின் குறியீடாக காண்பார்கள். ஈகோவின் குறியீடு. சூரன் போரிலன்று தந்தை செல்வா கலையரங்கில் கூடிய தலைவர்கள்-ஈகோவை-தன்முனைப்பைக் கைவிட்டு ஒற்றுமைப்படுவார்களா? பரந்துபட்ட அளவில் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஓர் ஐக்கியத்தை கட்டியெழுப்புவார்களா?

(ஆதவன் செய்தி)